
www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு - கார்த்திகை 1992




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர்களை நினைவு கூறுவோம்



**தியாகங்கள் என்றும் வீண்போவதில்லை**

இலங்கைத் தமிழர் மேல் சிங்கள பேரினவாத அரசு செலுத்திவந்த அடக்குமுறை 1977 உடன் யு. என். பி. அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியதுடன் ஒரு உச்சக்கட்டத்தை அடைந்தது. தமிழர்களின் கல்வி வாய்ப்புகள் குறைக்கப்பட்டன. அரசாங்கத் துறைகளிலும், தனியார் துறைகளிலும் தொழில் பெறும் வாய்ப்புகள் கிட்டத்தட்ட முற்றாகவே அருகிவிடும் நிலையை அடைந்தது. தமிழீழப் பிரதேசம் பொருளாதார ரீதியில் புறக்கணிக்கப்பட்டது.

1977 ல் இருந்து 1985 வரை இலங்கைத் தீவெங்கணும் இடைவிடாத இனப்படுகொலைகளும், இன ஒழிப்புகளும் நடைபெற்று வந்தன. தமிழீழப் பிரதேசத்துள்ளும், அதற்கு வெளியாலும் இவை சர்வசாதாரண நிகழ்ச்சிகளாகின. சிறு விடயங்களுக்குக் கூட தமிழன் தனது எதிர்ப்பையோ, வெறுப்பையோ வெளிக்காட்ட முடியாத நிலையே நிலவியது. தமிழீழம் மிகக் கடுமையான நெருக்கடிக்குள் சிக்கித் திணறியது.

தமிழீழத்தின் தன்னாட்சி உரிமையும், அத்தன்னாட்சி உரிமையைப் பெறுவதற்கான ஆயுதப் போராட்டமுமே இந் நெருக்கடிகளில் இருந்து விடுபடுவதற்கான ஓரே மார்க்கமாக இருந்தது. ஏனைய சகல மார்க்கங்களும் அடைக்கப்பட்டு விட்டன. இன ஒழிப்புக் குணாம்சம் கொண்ட சிறிலங்கா அரசுடன் ஆயுதப் போராட்டம் நடத்துவது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. மிகச் சிரமமான விடயமாய் இருந்தாலும் இது நடத்தப்பட்டே ஆகவேண்டிய ஒரு விடயமாகவும் இருந்தது.

இந்த நெருக்கடிக் கட்டத்தில்தான், இந் நெருக்கடிகளில் இருந்து தமிழீழத்தை மீட்டெடுக்கும் ஆற்றல் கொண்ட 'மாவீரர்கள்' அவசியப்படுகிறார்கள். இவ் அவசியம் நிறைவேற்றவும் படுகின்றது. தமிழீழ வரலாறு மாவீரர் சகாப்தத்துள் உட்புகுகிறது. முடிவில்லாத சங்கிலித்தொடர் போன்ற வீரர்களை தமிழீழ மக்கள் தோற்றுவிக்கிறார்கள். இன்றைய வரலாற்றின் தேவை நிறைவேற்றப்படுவதற்கு அடிப்படையாக அவசியப்படும் நியதி ஒன்று பூர்த்தி செய்யப்படுகின்றது.

இந்த 'மாவீரர்கள்' தோன்றியிருக்காவிடில், இன்று தமிழர் அனைவருமே அகதிகளாகவும், அடிமைகளாகவும் இருப்போம். "ம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்" என்ற நிலையிலேயே இருந்திருப்போம்.

இங்குதான் 'மாவீரர் டையின்' சமூக முக்கியத்துவம் உள்ளது. ஆனால் தமிழீழ விடுதலைப் பயணம் இன்னமும் முடிவடையவில்லை. மாவீரர்களின் கடமை இன்னமும் முற்றுப் பெறவில்லை. இதுவரை பெற்ற வெற்றிகளைப் பாதுகாக்கவும், இன்றைய நெருக்கடிகளை வெற்றிகரமாகத் தாண்டி முன்னேறவும், இறுதி வெற்றியை உறுதிப்படுத்தவும் வேண்டுமானால், காட்டு வெள்ளம் போலவும்; சங்கிலித் தொடர் போலவும் தமிழீழ சமூகம் பல்லாயிரக்கணக்கான 'மாவீரர்களை' மேலும் பிரசவிக்க வேண்டும்.

"மாவீரர்கள் தினம் வெறுமனே கடந்தகாலத் தியாகிகளை நினைவுகூரும் ஒரு தினமல்ல. மாறாக நிகழ்காலத்துக்கும், எதிர்காலத்துக்கும் அவசியமான டல்லாயிரக்கணக்கான "போர் தியாகிகள்" உருவாகுவதற்கு அவசியமான சமூகசூழலை உருவாக்கும், துரிதப்படுத்தும் ஒரு தினமாகும். இத்தினத்தில் உங்கள் கடமையை உணர்ந்துகொண்டு, உங்கள் திறமையை இனங்கண்டு, தேசவிடுதலைக்கும் மக்கள் சுதந்திரத்திற்குமான முயற்சியில் உங்களை அர்ப்பணியுங்கள்.

www.tamilarangam.net



# உள்ளே மலர்பவை



ஒரு தோழனின் நினைவலைகளில் அவன் .....3



விடுதலைப் போரில் ஒரு தாய் .....20



ஒரு அன்னையின் ஆவல் .....22



ஆனையிறவு ஆழப்பதிந்தவொரு காலச்சுவடு .....30

ஒரு தோழனின் நினைவலைகளில் இவன் .....3
கஸ்தூரியின் சிறுகதை .....5
தாய் நிலத்தைக் காதல் செய் (கவிதை) .....8
நினைவில் சில நிகழ்வுகள் ....10
சமகாலக் கண்ணோட்டம் ....15
விடுதலைப் போரில் ....20
ஒரு அன்னையின் ஆவல் (கவிதை) ....22
பெல்ஜியம் பிரிவினை நோக்கி ....23
தமிழீழம் அமைவது உறுதி ....24
ஓவியர் இராசையா ....27
ஈரப்பதன் (கவிதை) ....29
ஆனையிறவு ஆழப்பதிந்தவொரு காலச்சுவடு ....30
காலத்தை வென்ற கலைகள் ....33
காவல்துறை ....36

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதினோராம் ஆண்டு

கார்த்திகை 1992

ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
c/o T. C. C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42

# ஸ்ரீலங்கா அரச
## தந்திரோபாயத் திட்டம் தோல்வியில்.....


ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ்ப் பிரச்சினையைக் கையாள்வதில் தந்திரோபாய (Strategic Plan) திட்டத்தின் பிரகாரம் செயல்ப்படுகிறது என்பதை மறுக்க முடியாது. இத்திட்டத்தின் அரசியல் அடித்தளம் சிங்கள மேலாதிக்கத்தை பேணுகின்ற, ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பு வரையறை என்பதும் தெளிவான விடயம். இவ்வரையறைக்குள், பிரதேச சபைகள் என்ற உப அரசாங்க அதிபர் பிரிவு என்ற அலகிற்கு, சில சட்ட, நிர்வாக, அதிகாரங்களை மத்தியிலிருந்து வழங்கல் (Decentralisation) என்ற அளவிலே அதன் தீர்வுத் திட்டம் இருந்து வருகின்றது. ஆயினும், தமிழீழக் கோரிக்கை நிதர்சனமாக உறுதி பெற்றுவரும் நிலைக்கேற்ப அது, தற்போதைய ஸ்ரீலங்கா அரசியல் யாப்பு வரையறைக்குள், அலகினையும், அதிகார வழங்கலையும் விஸ்தரிக்கும் இழுவுத் தன்மை (Elasticity) கொண்டதாகவும் இருக்கிறது. ஆயினும் எவ்வளவுதான் இதனை இழுத்தாலும் சிங்கள மேலாதிக்கத்தை நிரந்தரமாகப் பேணுகின்ற ஒற்றையாட்சி முறையை விட்டு நீங்காதவாறு இருக்குமாறு தந்திரோபாயத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சிங்கள ஜனாதிபதி, சிங்களப் பாராளுமன்றம் என்ற அரசியல் வரையறைக்குள்ளும் நிரந்தரமான சிங்களப் பெரும்பான்மை என்ற நியதிக்குள்ளும், சிங்களம் மட்டும் என்ற இனவாதிகளின் கருத்துக்கும், பல்லின, பல்மொழி, பல் கலாச்சார என்ற மிதவாதக் கருத்துக்கும் இடையில் நடைமுறையில் வேறுபாடு இல்லை. இரண்டும் சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் வழிகளாகவே உள்ளன. ஒன்று, அப்பட்டமான இனவாதம் நிறைந்தது. மற்றது, மிதவாத முலாம் பூசப்பட்டது; அவ்வளவுதான். இந்தச் சிங்கள மேலாதிக்க வியூகத்தினுள் சிக்குப்பட்டுக் கொண்டு தமது இருப்புக்காக (Survival) மிரட்டலின் பேரில் (உயிராபத்து உட்பட) அரசியல் நாடகங்கள் ஆடிக் கொண்டிருப்பவர்களே கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள். இந்த இரண்டு எல்லைக்குட்பட்ட வியூகத்திற்குள் நின்று கொண்டு, 'பம்மாத்துக்' காட்டலாமே தவிர, தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக் கூடிய தீர்வு எதனையும் காணமுடியாது. மேலே குறித்த அடித்தளத்திலேயே ஸ்ரீலங்காவின் ஏனைய நகர்வுகள் அமைந்துள்ளன. அதில் முதலாவது, இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பது அல்லது பலவீனப்படுத்துவது. விடுதலைப் புலிகளை அழித்தொழித்தால், தமிழ் மக்களுக்கு பிரச்சனையே இல்லை என்று தட்டிக் கழித்துவிடலாம். பலவீனப்படுத்தி, ஏனைய தமிழ்க் குழுக்களுடன் இணைத்து விட்டால் அதிகபட்சம் புறம்பான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்ற அலகினுள்ளே, சிங்கள மேலாதிக்க ஒற்றையாட்சியினுள் பிரச்சனையைத் தீர்க்கலாம் (?) என்று ஸ்ரீலங்கா அரசு முயன்று வருகிறது. இது அரசியல் தீர்வு என்ற முகமூடி அணியப்பட்ட இராணுவத் தீர்வே ஆகும்.

இந்த ஒட்டுமொத்த தந்திரோபாயத் திட்டத்தில் மேலும் பல அம்சங்களும் உள்ளன. அதில் அடுத்த முக்கியத்துவம் வாய்ந்தது, தமிழர் தாயகத்தை சிங்களக் குடியேற்றங்கள் மூலம் துண்டாடுதல். தாயக மண்ணிலிருந்து தமிழ் மக்களை பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் கலைத்து, அப்பகுதிகளை சிங்கள மயப்படுத்தல். அதன் மூலம், வடபகுதியிலிருந்து, திருகோணமலையையும், திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு, அம்பாறையையும் பிரித்து, தமிழர் தாயகக் கோட்பாட்டை சிதைத்து இல்லாததாக்கல், திட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்ட அம்சமாகும். அடுத்தது, தமிழ், முஸ்லீம் மக்களிடையே நிரந்தரப்பகையை வளர்த்தல்; அதன் மூலம் அடக்கப்படும் மக்களிடையே ஏற்படும் ஒற்றுமையையும், உறுதியையும் சிதறடித்தல் நோக்கமாய் இருக்கிறது. மேலும், தேவையான போது, பல்லின, பல்கலாச்சார கருத்தை முன்வைத்து, சிங்கள மேலாதிக்கத் திட்டத்தை நிலைநாட்டவும், தமிழர் தேசியக் கொள்கையை, குழிதோண்டிப் புதைக்கவும் இந்தத் தந்திரம் பயன்படும். அரசாங்கத்தின் இத்தகு தந்திரோபாய திட்டத்தை விடுதலைப் புலிகள் தமது எதிர்த் தந்திரோபாயத் திட்டத்தின் மூலம் (Counter strategy) முறியடித்து வருகிறார்கள் என்பதே உண்மை. ஸ்ரீலங்கா அரசாங்கம் இத்திட்டத்தை முன்னெடுக்கும் நிலையிலிருந்து பின்வாங்கி, தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றது. இராணுவம் மன உறுதி குழம்பிய நிலையிலும் சகல இராணுவ நடவடிக்கைகளும் தோல்வி அடைந்த நிலையிலும், அடுத்து என்ன செய்வது என்ற தேக்க நிலை காணப்படுகிறது.

இராணுவ உயர் மட்டத்தில் போட்டியும், பூசலும் காணப்படுகிறது. அரசாங்கம் பலவீனமடைந்து எப்போது விழும் என்று தடுமாறிக் கொண்டிருக்கிறது. சிங்கள அரசாங்கம், தனது எல்லைகளையும், குடியேற்றங்களையும் காப்பாற்ற முடியாத நிலை காணப்படுகிறது. இது எதனைக் காட்டுகிறது? அரசாங்கத்தின் தந்திரோபாயத் திட்டம் வீழ்ச்சி அடைந்து வருவதையும், விடுதலைப் புலிகள் தமது தந்திரோபாயத் திட்டத்தை முன்னெடுத்துச் சென்று விடுதலையை வென்று வருகிறார்கள் என்பதையும் புலப்படுத்துகிறது.

www.tamilarangam.net





# ஒரு தோழனின் நினைவலைகளில் இவன்

இன்று எமது இயக்கம் எவ்வளவு பெரிய இயக்கமாக வளர்ந்து...... எவ்வளவு பெரிய சாதனைகளைப் புரிந்து....... எண்ணிப் பார்க்கிறேன்....... அன்று இந்த இயக்கம் இப்படியெல்லாம்..... வளரவேண்டுமென்று கனவு கண்டவர்கள் இந்த இயக்கத்தைச் சுமக்கின்ற தூண்களாக நின்றவர்கள்...... இன்று எங்கள் நினைவுகளில் ஜீவிப்பவர்களாகி எத்தனை காலம்....

இவர்களில் ஒருவன்தான் லெப்டினட் சங்கர். எந்தக் கடுமையான காரியத்தையும் சிரித்த முகத்தோடு ஏற்றுக்கொண்டு செயலாற்றுவான். இவனுடைய தாக்குதல் அணிப்பிரிவில் பங்குபற்றுகின்ற வீரர்கள் எந்தக் கிலேசமும் இன்றி தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் கருமமாற்றுவர்.

எமது விடுதலை இயக்கத்தின் அத்திவாரத்தை ஆட்டங்காணச் செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்ற இனத் துரோகிகளையும், உளவுப்படைகளையும் ஆட்டங்காணச் செய்வதே எமது போராட்டமாகிப் போன எத்தனை சாதனைகளை இவன் செய்தான்

-அப்பைய அண்ணை-

தலைவர் தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டுவிட்டார் என்று கேள்விப்பட்டதும் நாமெல்லாம் மிகவும் ஆத்திரமும், வேதனையும், துடிப்பும் அடைந்தோம். சங்கரும் அப்படியே தலைவர் மீது ஆழ்ந்த அன்பும், பாசமும், நம்பிக்கையும் வைத்திருந்தான்.

தலைவரை விடுவிக்க என்ன செய்யலாம்.....? எல்லோருடைய கேள்வியும் இது தான். இறுதியில் நாமெல்லாம் ஒன்று சேர்ந்து ஆலோசித்து தலைவரை விடுவிப்பதற்காக பல முயற்சிகளில் இறங்கினோம். இந்த வகையில் சங்கரின் பங்கு மிகப் பெரியது. ஈற்றில் நாம் வெற்றி கண்டோம்.

நெல்லியடி பொலிஸ் ஜீப் தாக்குதல் இவனின் வீரத்திற்கு எடுத்துக்காட்டு. சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் இவனின் சாதனை பெரியது. தாக்குதலின் முடிவில் கூட காயம்பட்டவர்களையும் ஆயுதங்களையும் கொண்டு வந்து சேர்ப்பதில் இவனின் வேகம்..... விரைவு...... பலம்.....

எதிரியின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, விடுதலைக்காய் வியர்வை சிந்திக் கொண்டிருந்த சங்கர் ஒரு நாள்...... இரத்தத்தைச் சிந்திக் கொண்டிருந்தான்... ஆம் அவன் யாழ். குடாநாட்டில் ஒரு வீட்டில் வைத்து எதிரியால் சுற்றிவளைக்கப்பட்டு சுடப்பட்டுவிட்டான். வயிற்றில் குண்டை வாங்கிக் கொண்டும், சிங்களச் சிப்பாய்களை ஏமாற்றிவிட்டு ஓடிக்கொண்டிருக்கிறான். கையில் ஒரு கைத்துப்பாக்கி (-பழையது 45) அவனுடைய இலட்சியப்பற்றும், உறுதியும், அர்ப்பண உணர்வும் அவனின் இறுதி முயற்சிக்கு கை கொடுத்தன. வயிற்றிலிருந்து குருதி வழிந்தவாறே இருக்க...... அவன் அனுபவித்துக் கொண்டிருந்த ரணவேதனையையும் மீறி கால் தசைகள் பலமாகவும் வேகமாகவும் இயங்கி அவனை தோழர்களிடம் கொண்டு வந்து சேர்த்தது.

எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் அவனைப் படகு மூலம் தமிழ் நாடு கொண்டு போய்ச் சேர்த்தோம். தன் உடலில் உள்ள குருதி முழுவதையும் சிந்திய நிலையில் சங்கர் வலுவிழந்து கிடந்தான். முதன் முதலாக எமது குடும்பத்தில் ஒருவன் மண்ணுக்காக குருதியைச் சிந்திவிட்டு

www.tamilarangam.net



உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறான்......... அப்பொழுது நாம் 20 - 25 பேர்கள் தான் இருப்போம். சங்கர் மீதுள்ள அன்பாலும் பாசத்தாலும் ஒரு தந்தையைப் போன்று தலைவர் மிகவும் சோகமாகக் காணப்பட்டார்.

தன் உடலில் உள்ள குருதியை சங்கரின் உடலுக்குக் கொடுத்தார்....... அவன் உயிரோடு பிழைத்துத் தன்னோடு விடுதலைப் பணியினைத் தொடருவான் என்று...... நம்பிக்கைகளை மெது மெதுவாகக் கரைத்துக் கொண்டு....... சங்கர் தலைவரின் மடியிலேயே நிரந்தரமாகப் படுத்துக் கொண்டான். ஆம்...... அவன் எல்லோரையும் விட்டுப் பிரிந்து விட்டான்..... நம் உடன் பிறப்பு நம் எல்லோரையும் விட்டுப் பிரிந்து விட்டது......

இத்தகைய துயரம் நிறைந்த நாளே இன்று நம் தோழர்கள் அனைவரினதும் நினைவு நாளாக, நம் நெஞ்சங்களை நெருடுகின்ற நாளாக..... எங்கள் உயிரானவர்களை உணர்கின்ற நாளாக....... மாவீரர் நாள் இன்று பிறப்பெடுத்திருக்கிறது.

நன்றி - விடுதலை இரத்தத்தில் முதல்துளி - லெப்டினட் சங்கர்.

ஐப்பசி, 1992. எரிமலை இதழில் வயோதிபத் தாத்தாவைப் பற்றி உங்கள் உள்ளங்களில் உரசும் உணர்வுகளை எவ் இலக்கிய வடிவிலாயினும் தரும்படி கேட்டிருந்தோம்.

கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என வாசகர்களிடமிருந்து நிறைய ஆக்கங்கள் வந்திருந்தன. அவற்றில் சிறந்தவையெனக் காணப்பட்ட இரு ஆக்கங்களை இங்கே பிரசுரித்துள்ளோம்.



## தொலைந்த கனவும் தொலையா உணர்வும்

வாழ்ந்த நாட்களில்
வயதினை தொலைத்தவன்.
காலத்தின் பசிக்கு
கட்டிய மனைவியை
அரச படையிடம்
அன்பு மகனை
அன்னிய படையிடம்
அருமை மகளை
உருண்ட காலத்தில்
உழைத்த செல்வம்
மானிடப் பிறப்பின்
மனித உரிமை
யாவும் தொலைத்தவன்.
யாவையும் இழந்தவன்
கண் தூக்கம் இன்றி
கனவையும் தொலைத்தவன்.

தொலைந்தது எல்லாம்
தொலைந்த பின்னாலும்
தொலையாமல் வாழ்வை
தொடர்வது ஏனோ?

சுதந்திர நினைவில்
சுடரும் உணர்வை,
மனிதர் நாமெனும்
மகத்தான மனதை
தன் இன மானம்
தனித் தமிழ் மண்ணை
மறந்தும் கூட
தொலைக்கவேயில்லை.

நாளைய தலைமுறை
நம் ஈழ மண்ணில்
சுதந்திரக் காற்றை
சுவாசித்துக் கொண்டு
களித்து நடப்பதை
காணும் ஓர் ஆசையை
கருத்தை விட்டுத்
தொலைக்கவேயில்லை

- ஞானி -
ஜேர்மனி.

## வயோதிபனே !

கன்னத்தில் கை வைத்து துயரத்தை உள்வாங்கி இப்படி நீ தோற்றக் காரணம் தான் என்ன? முதுமை உன்னை இரு கரம் நீட்டி வரவேற்பதை நினைத்தா? இல்லவே இல்லை. அதுவல்ல உன் துன்பம். உன் உழைப்பின் உயர்வினால் ஒவ்வொரு செங்கல்லாய் நீ பார்த்துக் கட்டிய உன் வீடு, குலை தள்ளிய வாழைகள், பூவும் பிஞ்சுமாய் எலுமிச்சைகள், ஆடு, கோழி என்று உன் வாழ்க்கைச் செல்வங்கள்...... அந்நியன் விரட்டிய போது இவற்றையெல்லாம் விட்டு பேரக் குழந்தைகளை நீ அணைத்தபடி ஆற்றைக் கடந்து அக்கரை போன போது ஆற்றுடன் சென்ற உன் மனைவியும் மகளும்...... இது உன் துயர் மட்டுமல்ல, இந்த தேசத்தின் துயரம்.

'ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிப்போம்
அவர் தடம் பதித்த
எம் மண்ணைக் குருதியால் கழுவுவோம்
புதிய நாடொன்றை அமைப்போம்
அதில் அழகிய வீடொன்றமைப்போம்.
புதுமனை புகுவிழா நடாத்துவோம்
நித்தமும் மகிழ்ச்சி எம்மை அண்டியே இருக்கும்.'

எவ்வளவு அழகாகச் சொன்னார்கள் உன் பேரப் பிள்ளைகள். முதலில் நீ மறுத்தாலும் பின் அவர்களை போராட வழியனுப்பி வைத்தாய்.

முதியவனே! நம்பிக்கையுடனிரு. நாளை தமிழீழம் மலரும். நீ விட்டு வந்தது புறம்போக்கு நிலமல்லவே. உன் பூமி. அது வரை உன் மூச்சை நிறுத்தி விடாதே!

இரா. அன்பரசி
ஜேர்மனி.

www.tamilarangam.net



மத்தியான வெய்யில் சுட்டெரித்தது. வெயிலுக்குப் பயந்தோ என்னவோ காற்று ஒரு அங்குலம் கூட அசைய மறுத்தது. சீ.... 12. 40... நசல் இன்னும் 20 நிமிடம் கிடக்கு.

சுமதிக்கு ஒரேயடியாக வியர்த்து ஊற்றியது. இப்போதே இந்த வாங்கிலில் விழுந்து படுக்க வேண்டும் போலிருந்தது. தலையைச் சுற்றி வயிற்றைப் பிரட்டி சத்தி எடுக்கப் போவது போல் அந்தரமாய் வந்தது.

'முன்னுக்கிருந்தாலாவது ஓரளவு என்னேயிறதெண்டு கவனிக்கலாம். இது பின்னுக்கு; ஆகலும் அலுப்படிக்குது...... உள்ள சோம்பேறிக் கூட்டம் முழுக்கப் பின்னுக்குத்தான்..... நானுந்தான்.....'

எரிச்சல் எரிச்சலாய் வந்தது. வியர்த்ததாலோ என்னவோ தலை ஒரேயடியாக அரித்தது..... இரண்டு கைகளாலும் விறாண்ட வேண்டும் போல் இருந்தது.

'ஒரேயடியாக நாலு மணித்தியாலம் எழும்பாமல் இருக்கிறதெண்டாச் சும்மாவே....? 9 மணிக்குத் துவங்கின வகுப்பெல்லே! சீ ஒன்பது மணிக்கெங்கை துவங்கினது. ஒன்பதரைக்கெல்லோ...... அரை மணித்தியாலம் பிந்தித் துவங்கிறதே டியூட்டரிலை ஒரு பாசனாப் போச்சு. முடிக்கேக்கை மட்டும் நேரத்துக்கு முடிப்பினம்.'

ஆண்கள் வரிசையில் நாலாவது வாங்கில் ஓரமாக உட்கார்ந்திருந்த நீல சேட் போட்டிருந்த பையன் இரண்டாவது பாடத்திற்கே தூங்க ஆரம்பித்துவிட்டான். இப்போது நிறையப் பேர் தூங்கி விழுகிறார்கள். தூக்கத்தில் கழுத்து மடியும் போது திடுக்குற்று விழித்து...... அசடு வழிய இரண்டு பக்கமும் பார்த்து...... உடனேயே மிகவும் உஷாராக கண்களை அகல விரித்து வெட்டி நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து கொள்வார்கள்.

அரை நொடியில் மீண்டும் தலை தொங்கிச் சரியும்..... உடல் குலுங்க மீண்டும் உஷாராகுவார்கள். திடுக்குற்று விழும் போது பார்க்க வேண்டுமே; சிரிப்புச் சிரிப்பாக வரும்.

'மாஸ்டரை வந்து அவசரமாக ஆரும் கூட்டிக் கொண்டு போச்சினமெண்டா...... இனியும் என்னால இருக்கேலாது எழும்பி நிக்கப் போறன்..... கேட்டாச் சொல்றது தலையைச் சுத்தி என்னவோ செய்யுதெண்டு சீ....... எல்லோரும் என்னைத்தான் பார்ப்பினம்...... அதுக்கென்ன? அவைக்குத் தெரியப் போகுதே எனக்குச் செய்யிற வருத்தம். ஒருவேளை அவையளுக்கும் இப்படித்தான் செய்யும், என்னேயிறதெண்டு பேசாம இருக்கினமோ தெரியாது.'




**கஸ்தூரி**

சுமதி பொறுமையிழந்து புழுங்கினாள். மாணவி ஒருத்தி கேள்வி கேட்டாள். கேள்வி விளக்கமில்லாததாக இருந்திருக்க வேண்டும். மாணவர்கள் 'கொல்'லென்று சிரித்தார்கள்..... அவளையே பார்த்தார்கள். ஆசிரியரும் சிரித்தார். பின்னர் ஏதோ கூறிச் சமாளித்தார்.....

'விளக்கங் குறைஞ்சவள் வாயை வைச்சுக் கொண்டு பேசாம இருந்திருக்கலாம்.' சுமதி கேள்வி கேட்ட மாணவியை மனதுக்குள் திட்டினாள்.

ஆசிரியர் தேய்ந்து போன "சோக்" கட்டியை மேசை மீது வைத்தார். அசடுவழியும் புன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிரிப்போடு அவசரமாக தலையை ஆட்டிவிட்டு நகர்ந்தார்...... எப்போதுமே வகுப்பை முடிக்கும் போது இப்படித்தான் சிரிப்பார். இவ்வளவு நேரமும் தொந்தரவு செய்ததற்கு மன்னித்து விடுங்கள் என்பது போலிருக்கும் அந்தச் சிரிப்பு.

சுமதிக்கு இப்போதுதான் அப்பாடா என்றிருந்தது. நிம்மதியாக மூச்சுவிட்டாள். மாணவர்கள் நெருக்கியடித்துக் கொண்டு வெளியே செல்லத் துடித்தார்கள். என்னதான் வகுப்பில் அமைதியாக இருந்தாலும், எப்போது வகுப்பு முடிந்து வெளியே செல்வோம் என்பதில்தான் எல்லோரும் குறியாய் இருந்துள்ளார்கள் என்பது, அவர்களின் நடத்தையிலிருந்து தெரிந்தது.

சுமதிக்கு தனித்து வீடு செல்ல வேண்டியதை நினைக்க என்னவோ போல் இருந்தது.

'விசர்...... ஏன்தான் வராமல் விட்டுதுகளோ தெரியாது.....' மேகலாவும் சுதாவும் வராதது வகுப்பிற்கு வந்தபின்தான் சுமதிக்குத் தெரிந்தது. ஆத்திரமாய் வந்தது.

'விசருகள் நேற்றே சொல்லியிருந்துதுகள் எண்டா நானும் நிண்டிருப்பன்...... அந்த நாயளுக்கை அரியண்டப் படுகிறதை விட பேசாம வீட்டிலேயே நிற்கலாம்' அந்தக் கண்ணாடிக் காரத் தடியனை நினைக்கவே பயமாக இருந்தது. 'அந்த நாய்கள் இருக்கிற வரைக்கும் மனிசருக்கு நிம்மதியே இல்லை...... பாமினி, நித்தியாக்கள் அதாலதானே போறவை. இனி என்செய்யிறது....! அதுகளோடை அவ்வளவாக் கதைக்கிறதுமில்லை. இண்டைக்குப் போக என்ன நினைக்குதுகளோ தெரியாது. இதிலை நினைக்குறதுக்கு என்ன கிடக்கு. எனக்கென்ன அவையோட அடிபிடி சண்டையே...... கதைக்கிறதுக்கும் ஏதும் அலுவல் இருந்தாத்தானே கதைக்கிறதுக்கு'

நித்தியா ஆசிரியருடன் ஏதோ கதைத்துக் கொண்டு நின்றாள். பாடத்திற்கு விளக்கமாக இருக்கும்..... சுமதிக்கோ அவர்களுக்காக காத்திருப்பது வெறுப்பாக இருந்தது.

'வருதுகள்... வருதுகள். எங்கையோ ஒரு குருகுருத்த கோஸ்டி, எங்கை கூட்டுச் சேர்ந்துதுகளோ தெரியாது. ரோட்டிலை அல்லோ பார்க்க வேணும். காய்..... கூய் எண்டு முந்திக் கொண்டு போற வாற வாகனங்களுக்கும் சைட் குடுக்காமல்..... சிக் உதுகளோடை போனா எனக்கும் மரியாதை இல்லை...... இனி என்ன செய்யிறது, போய்த் தானே ஆக வேண்டும்.

"ஓமோம் என்ன நடந்ததெண்டு தெரியவில்லை. இரண்டு பேரும் நிண்டிட்டினம்..... நீங்கள் நேரே வீட்டைதானே போகிறியள்......?



கால நகர்வில் பல கவிஞர்கள் வருவார்கள். பல கவிதைகள் பிறப்பெடுக்கும். ஆனால் சில கவிதைகளும், சில கவிஞர்களும் மட்டுமே பல யுகங்களிற்கு வாழ்வதுண்டு. கவிதைகளைத் தவிர சிறுகதைகள், நாடகங்கள் போன்ற படைப்பாக்கங்களும் இவ்வாறுதான். "மக்களைப் பிரிந்த துப்பாக்கிகள்" என்ற சிறுகதையில் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து செயற்பட்ட தேசத் துரோகிகளினது கோரமான பதிவுகளை அப்படியே சொல்லுகின்றன. மன்னிக்க முடியாத துரோகத்தனங்களை, அழிக்கப்பட முடியாத வடுக்களை கஸ்தூரியின் பேனா கிழித்துப் போட்டிருக்கிறது.

தயங்கியபடியே சிரிப்பை வரவழைத்துக் கொண்டு நாசுக்காக கேட்டாள் சுமதி. "இவள் நித்தியா ஏதோ துணி எடுக்க வேணும் எண்டாள்..... என்ன நித்தியா எனக்கெண்டா ஒரே பசியாக் கிடக்குது. நாளை ஈவினிங் நீயும் நானும் வந்து எடுப்பமன்...... என்ன முழியைப் பிரட்டுறாய் சொல்லன்....."

"என்னவோ நீ சொல்லுறாய்..... சரி நாளைக்கு எடுப்பம். பிறகேன் நிக்கிறியள்......"

அப்பாடா இவள் ஓமெண்டதே பெரிய புண்ணியம். இல்லாட்டி நானும் டவுன் முழுக்க உதுகளுக்குப் பின்னாலை வாய் பார்த்துக் கொண்டு திரிஞ்சிருக்க வேணும். யார்தான் கூட வந்தாலும் அந்தக் காம்படியால் போகவேண்டும் என்ற நினைப்பே, சுமதிக்கு நரக வேதனையாய் இருந்தது. 'கடவுளே அவங்கடை காம்பைத் தாண்டிப் போகிறவரைக்கும் நீதான் துணை...... இண்டைக்கு அந்தச் சனியன் பிடிச்சவன் என்னேயிறானோ தெரியவில்லை. என்னை மட்டும் தனியா மறிச்சான் எண்டால் என்னேயிறது...... வாடி என்று உள்ளுக்கை இழுத்துக் கொண்டு போனால்.....? உங்கை எத்தனை பேரை அப்படிச் செய்தவங்கள்..... கடவுளே...... அப்படி மட்டும் ஒன்றும் நடக்கக் கூடாது.'

சுமதிக்கு காம்பை நெருங்க நெருங்க அடிவயிற்றில் ஏதோ செய்தது. 'கடவுளே எனக்கேன் இப்படி வேர்க்குது....... கை கால் எல்லாம் நடுங்குது..... பயமாக் கிடக்கு..... நான் என்ன செய்ய..... எவ்வளவு தூரத்திற்குத்தான் தலையைக் குனிஞ்சு கொண்டு போறது...... பார்... பார் தரித்திரண்டை பல்லை. எப்ப நிமிருவனெண்டு பார்த்துக் கொண்டிருந்தவனாக்கும்.'

இவளைப் பார்த்து பல்லை இளித்த இந்திய இராணுவத்தினன் யாரையோ கத்திக் கூப்பிட்டபடி உள்ளே ஓடினான். ஒரு பெரிய கூட்டமே உள்ளேயிருந்து ஓடி வந்தது. கண்ணாடிக் கார

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னும் இன்னும் நாலைந்து பேரும் வந்தார்கள். "சுமதி..... சுமதி..... நில்லடி"

'சனியன் சனியன் பேரைச் சொல்லிக் கூப்பிடுகிறான்...... ஐயோ அவையளும் போறாளவை. நான் என்ன செய்ய? இன்னும் நாலைஞ்சு பேர் வாறாங்கள்.......'

கண்ணாடி போட்டவன் ஓடிவந்து சைக்கிள் காண்டிலைப் பிடித்துக் கொண்டான். சுமதி விழப் போனாள்..... விழவில்லை...... அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. மறுபக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

"என்னடி நான் கூப்பிடுறன்...... நீ உன்டை பாட்டிலை திரும்பியும் பார்க்காம போறே என்ன......?

'பாவி காண்டில்லை கையைப் போட்டுக் கொண்டு நிற்கிறானே. சனம் பார்த்தா என்னைப் பத்தி என்ன நினைக்கப் போகுது' சுமதிக்கு பயம் மாறி ஆத்திரம் வந்தது.

"என்னடி நான் கதைக்கிறன், நீ பேசாம நிக்கிறாய். L. T. T. E காரங்கள் எண்டா ஒழிச்சு ஒழிச்சு சாப்பாடு கொடுப்பியள் என்னடி?"

'உன்டை லச்சணத்திற்கு நாங்கள் கதைக்காதது ஒன்று தானே குறை. எளிய மூதேசி. நீயும் ஒரு தமிழனே! இல்லாட்டி நடு றோட்டிலை ஒரு பொம்பிளைப் பிள்ளையை மறிச்சு வைச்சு சேட்டை விடுவியே..... அங்கர் இந்தியக் காரங்கள் முழுப் பேரும் இங்கைதானே பார்த்துச் சிரிக்கிறாங்கள். உன்ர கொக்கா தங்கச்சியை நடு றோட்டிலை ஆரும் மறிச்சு வைச்சிருந்தா உனக்கு பார்க்க எப்படி இருக்கும்.....-சிக்.... மனிசரெண்டாவல்லோ அதை யோசிக்கிறதுக்கு.'

"என்னடி முறைக்கிறாய்? ஊமையே. வாய்திறந்து கதையன்..... ஏதோ இண்டைக்குத் தான் புதிசா கதைக்கிறமாதிரி வெட்கப்படுகிறாய்....... "

'இனியும் ஏன் நாங்கள் உங்களுக்குப் பயப்பிட வேணும். நாங்கள் அழ அழத்தான் அவரவைக்குச் செட்டு வாறது.

ஏதோ தாங்கள் சரித்திரம் படைக்கப் போற மன்மதக் குஞ்சுகள் எண்டு நினைப்புப் போல. சனமா வெளிக்கிட்டு உவங்களை கட்டி வைச்சு உரிக்க வேணும். அப்பதான் நாங்கள் மனிசரா வாழலாம்.'

"டேய் எடடா கையை ராஸ்கல். காண்டில்லை இருந்து எடுக்கப் போறியா இல்லையா." ஆத்திரத்தின் எல்லையில் சுமதி வாய் திறந்து கத்தினாள் அடுத்த கணம். ஏற்கனவே சிவந்திருந்த கண்ணாடிக்காரனின் கண்கள் மேலும் சிவப்பாக, பளீர்...பளீர் என சுமதியின் கன்னத்தில் மாறி மாறி அறைந்தான்..... தலைமுடியைப் பிடித்து முகத்தை தன் பக்கம் திருப்பினான்.

"நல்லாத்தாண்டி கொழுத்துப் போனியள்...... எனக்கே வாய் காட்டுகிறாய் ஏன்டி.... எளிய.... ஏதும் கதைச்சியெண்டால் வெட்டிப் புதைச்சுப் போடுவன்.......க்கு என்னைப் பற்றி விளங்கேல்லை."

சுமதிக்கு கண்ணை மின்னி தலை சுற்றியது. கன்னங்கள் இரண்டும் விண் விண் என்று வலியெடுக்க தலை விறைத்துக் கொண்டு வந்தது.

'கடவுளே...... ஏ..... என்ன மாதிரி அடிச்சான். ஒரு அடியிலை உயிர் போயிடும் போல கிடக்கு. போனல் போகட்டும். உரிச்சுப் போட்டாலும் உவங்களை சும்ம விடக்கூடாது. தூ..... நாய்க்கூட்டம். எளிய வடுவாக்கள். எத்தினை நாளைக்கு உதிலை இருக்கப் போறியள் பார்ப்பம்.'

எள்ளும் கொள்ளும் வெடிக்கும் அவன் முகத்தைப் பார்க்க சுமதிக்கு மூச்சுத் திணறியது. தட்டுத் தடுமாறி சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாக இடத்தை விட்டு புறப்பட்டாள். பின்னால் அவன் கெட்ட வார்த்தைகளால் திட்டுவது கேட்டது.....

(மிகுதி அடுத்த இதழில்...)



## திலீபனின் ஐந்தாவது நினைவு தினம்

திலீபனின் ஐந்தாவது நினைவுதினம் குடாநாடு முழுவதிலும், ஏனைய பகுதிகளிலும் பொதுமக்களால் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. எங்கு பார்த்தாலும் வீட்டுக்கு வீடு திலீபனது படங்களை வைத்து அதற்குரிய கொட்டில் அமைத்து சோடனைகள் செய்திருந்தார்கள். அனேகமாக எல்லா இடங்களிலும் சிறுவர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் ஈடுபட்டார்கள். 26ம் திகதியை எழுச்சி நாளாக விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருந்தது.

இம்முறை திலீபனின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒலி, ஒளி, இழைநாடாக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் தியாகப் பயணத்தில் 12 நாட்கள் வெளியீடும் வெளியிடப்பட்டுள்ளது.

www.tamilarangam.net





- புதுவை இரத்தினதுரை



# தாய்நிலத்தை காதல் செய்

1992 ஆடி 20ம் திகதி
முற்பகல் 10.00 மணி.
இடம்:-
கோண்டாவில்
தோட்டவெளி.


1992 ஆடி 12ம் தேதி
நள்ளிரவு 1.00 மணி
இடம்:-
கட்டுநாயக்கா சர்வதேச
விமான நிலையம்.

தம்பி டேய்!
நீ கோப்பாய்த் தவராசா வாத்தியின்ரை
தம்பியல்லே....
எங்கை பயணம்.... கனடாவோ?
அடிசக்கை....
போங்கோ..... போய்த்திரும்பிப்
பிறகெல்லாம் முடிஞ்ச பின்னர்
வாங்கோ, கிழடுகள் நாம்
வரவேற்கக் காத்திருப்பம்.

நெருப்புக்குள் நின்றும் நிமிர்ந்தோம்.
சிரிக்கின்றோம்.
இருப்பிழந்து போகாமல் இன்னும் இருக்கின்றோம்.
பெருமைப்படு,
தேகம் புல்லரிக்க நின்றாடு,
தொழுதெம் மண்மீது தொடு,
கண்ணில் வை.
புழுதிமண்ணானாலும் புரண்டு விழுந்தெழும்பு.
தாயை நிகரெங்கள் தாயகத்தைக் காதல் செய்.
வாயால் புகழ்ந்தேற்றி வாழ்த்து.
இம்மண்ணில்,
வீரம் விளைக்கின்ற வீரர்களை மனத்தெண்ணு.
பாரம் சுமக்கின்ற பாலகரைக் கட்டியணை.
நேற்றுவரை தூங்கி நினைவிழந்து,
எதிரியெனும்,
கூற்றுவனுக் கிலக்காகிக்
குலைந்தழிந்த தமிழினத்தை
ஆற்றுப்படுத்தவந்த அத்தலைவன் பெயரைச்சொல்.

www.tamilarangam.net





மாரியெனக் குண்டு மழைபொழியும்,
எறிகணைகள்
கூவிவரும்.
வீதிகுழியாகும்,
நாங்களிங்கு,
நாறிப்போய் விட்டோமா?
நடைபிணங்க ளானோமா?
இல்லை...
இதற்குள்ளே இருக்கப் பழகி விட்டோம்.
புல்லும் நிமிர்ந்து போர்க்கோலம் பூண்டது போல்
வெல்வோம், எனும் உறுதி
வீச்சோடு வாழ்கின்றோம்.
ஆனை வந்தெங்கள் அழகான வயலுக்குள்,
சேனை, புலவுக்குள்,
தின்கிறது.
வழியாலே....
போய் வார பேரைப் பிடித்து மிதிக்கிறது.
'காய்கூய்' என்றாரும்
கத்தித் தொலைத்தாலும்
வாய் நோகுதன்றி "வாரணங்கள்" போகுதில்லை.
வெடிகொழுத்திப் போட்டால் வெருண்டோடும்
அதற்கிங்கே
பொடியள் சிலபேர்கள் போதுமா?
கனபேர்கள்
வேண்டும், என்செய்வோம்.
விருத்தெரிந்த இளசெல்லாம்
கூண்டு திறந்து... குருவிகள் போல்....

கடற்பரப்பைத்
தாண்டி,
தங்களது,
தனிச்சுகமே சுகமென்று
திக்கொன்றாய் பறந்து திசைமாறிப் போயினவே.
தக்க தருணத்தில் தாய்மண் துணையின்றித்
துக்கித் திருக்கின்றது.
தொப்புள் கொடியுறவு
எல்லாம் பொய்யாகி, இல்லாதொன்றாகிப்
பல்தேச மெங்கும் பறந்து சிதறினவா?
என்றாலும் நாங்கள் இருப்பை இழக்கவில்லை.
தென்னை இளநீரும்
செவ்வலரி சிறுபூவும்
கண்மலர்த்திவேம்பு காய்பழமும் தருகிறது.
கத்தரியும்,
வெண்டிக்கன்றும்,
பூக்கிறது.
சட்டிக்கரணை தழைக்கிறது.
ஆதலினால்,
இந்தமண் அழகோடு இன்றும்தான் இருக்கிறது.
எந்தத்துயர் வரினும் இனிக்கலக்கம் கொள்ளாது.
ஆழக்கிணறு,
ஆடுகால்ப் பூவரசு,
நீளக்கிடக்கின்ற நெல்வயல்கள்
உள்ளமட்டும்
காலில் விழுந்தெவர்க்கும் கைகட்டி நிற்காது.
நேற்றென் பேரன் நேர்வந்தான்.
எனைக்கட்டி
காற்றில் மிதந்தான், களித்தான்
முத்தமிட்டான்,
வரம்பில் இருந்தான், வாய்க்காலின் தண்ணீரை
விரும்பிக் குடித்தான், வெளிக்கிட்டான்.
'எங்கேயடா போகின்றாய்'
என்றேன்
நின்றான்
'சண்டைக்கு' என்று சத்தமிட்டுச் சொல்லிவிட்டு
சென்றான்.
இனியெங்கள் தேசம் பணியாது,
தாய்மண்ணைக் காதலிக்கும் துளிர்கள் இருக்குமட்டும்
பாய்விரித்தெம்தேசம் படுக்காது,
போர் செய்யும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






சென்ற இதழ் தொடர்ச்சி

வெளியில் நவத்தினுடைய நிலைப்பாடோ வேறுமாதிரி இருந்தது. 5 மணியளவில் ஓர் வீரனை இராணுவத்தின் வருகையை அறிவிக்கும்படி கூறி மினிமுகாமிற்கு அருகில் அனுப்பி வைத்திருக்கின்றார். 5 மணிக்கு வந்த போராளி, இராணுவத்தினர் வராததால் சற்றுப் பின்னால் உள்ள பற்றைக்குள் பதுங்கியிருந்து பார்த்திருக்கின்றார். அவ்வீரனோ பகலில் நடந்த களைப்பினாலும், தொடர்ச்சியான நித்திரையின்மையாலும் சற்று உறங்கிவிட்டார். அவரிற்கு 5.15 க்கு இராணுவத்தினர் வந்தது தெரியவாய்ப்பின்றிப் போய்விட்டது.. இதனால் இராணுவத்தினர் பாடசாலைக்கு வந்து சேர்ந்த விபரமும் நவத்திற்குத் தெரிய வாய்ப்பின்றிப் போய்விட்டது. இராணுவத்தினர் இன்னும் பாடசாலைக்குள் வரவில்லை என்ற நினைவிலேயே நவம் மற்றைய போராளிகளுடன் உடனடியாக எமக்கு உதவி தேவைப்படின் வழங்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டுள்ளார். ஆனால் நவத்தினுடைய மனமோ உள்ளே உள்ள எங்களிற்கு எந்த விதத்தில் உதவிகள் விரைவாக வழங்க முடியுமோ அந்த முறைகளையெல்லாம் சக போராளிகளிற்கு விளங்கப்படுத்திய வண்ணம் இருந்தார். பின்னர் நவம் 7 மணியளவில் வேறு இரு போராளிகளை முகாமில் இராணுவத்தினர் வந்துவிட்டனரா என்பதை அறிய அனுப்பி வைத்தார்.

7 மணி 10 நிமிடம் அளவில் வெளியில் இருந்து பாடசாலை மினி முகாம் கட்டிடங்களை நோக்கித் தொடர்ச்சியான 30 துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டன. எங்கள் அனைவரது முகங்களிலும் சந்தோசம் தானாகவே நிரம்பியது. நாங்கள் எதிர்பார்த்த அந்தச் சந்தர்ப்பத்தை ஒழுங்காக செயல்படுத்தினோம்.

நாங்கள் ஐவர் இருந்த அறைவாசலில் சாய்ந்துகொண்டிருந்த இரண்டு இந்தியச் சிப்பாய்களும் உடனடியாக நிலத்தில் விழும் சத்தமும் அதனைத் தொடர்ந்து இரகசியமாக எல். ரி. - ரி. ஈ எனக் கத்துவதும் எமக்குத் தெளிவாகக் கேட்டது. உடைந்த யன்னலுடன் அமைந்திருந்த காவல் அரணில் இருந்து துப்பாக்கியால் வெளிப்புறத்தை நோக்கி 4, 5 வேட்டுக்களைச் சுட்டப்படி இருந்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்துவதற்காக எமது அறைக்கதவினை திறந்துகொண்டு திடீர் என்று நானும் எல்விற்றனும் வெளியில் பாய்ந்தோம்.

அப்போது எமது அறைவாசலில் விழுந்து படுத்துக்கிடந்த இரண்டு இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கிகள் எமது அறைக் கதவோராமாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டோம். எமது கையில் சுடுவதற்கு தயாராக



www.tamilarangam.net



இருந்த ரைபிள்களையும் எமது முகத்தில் இருந்த உக்கிரத்தையும் பார்த்த அவ்விரு சிப்பாய்களும் உடனடியாக அதிர்ச்சியினாலும், ஏக்கத்தினாலும் அப்படியே உறைந்துபோய் வாயை அப்படியே ஆ.. எனப் பிளந்தபடி கண்வெட்டாமல் எமைப் பார்த்தனர். அவர்களது துப்பாக்கிகளை உடனடியாகக் கைப்பற்றிய நாங்கள், உள்ளே இருந்த சுமனையும் கணேசனையும் அழைத்து கைதுசெய்யும்படி கட்டளையிட்டுவிட்டு அவர்களது காவலரண்களை நோக்கி (பின்புறமாக) ஓடினோம். அச்சிப்பாய்கள் சுமனின் துப்பாக்கியைக் கைப்பற்ற முயற்சித்தபோது கணேசும், சுதனும், அவர்களைச் சுட்டுவிட்டு எம்முடன் இணைந்து ஓடிவந்தனர்.

எமது அறையின் உடைந்த யன்னலில் சாய்ந்து இருந்த இந்தியச் சிப்பாய் தனது துப்பாக்கியின் பெரும் பாகத்தை வேலி முட்கம்பிகளுக்கு இடையில் சிக்கலான பகுதியில் நீட்டி வெளிப்புறமாக இருந்த குடியிருப்புக்களை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தான். அவனின் அருகில் சத்தமின்றிச் சென்ற நான் அவனை நோக்கி எனது துப்பாக்கியின் நுனியைக் குறிபார்த்தபடி அவனது இராணுவப் பாணியில் எனது காலால் உதைத்து இங்கு என்ன செய்துகொண்டிருக்கின்றாய் எனக் கேட்டேன். அதுவரை என்னை அவதானிக்காத சிப்பாய், துப்பாக்கிகளின் வேட்டுச் சத்தத்திலும், மறுபுறங்களில் இறந்துகொண்டிருந்த இந்தியச் சிப்பாய்களின் மரண ஓலங்களிலும் நான் அழைத்தது கேளாததுபோல் திரும்பிப் பார்த்தான். எனது துப்பாக்கி முனையையும் எனது நிலையையும் கண்ட அந்தச் சிப்பாய் வாயடைத்துப் போய் எனைச் சுடுவதற்காக தனது துப்பாக்கியை முட்கம்பிகளுக்கிடையில் இருந்து இழுத்து எடுக்க முயற்சித்தான். ஆனால் துப்பாக்கி நாடா முட்கம்பியில் சிக்கியதால் துப்பாக்கியை எடுக்க முடியவில்லை. உடனடியாக கைகளை உயர்த்தி கத்தியபடி எனது துப்பாக்கியையும் காலையும் பிடிப்பதற்குத் திரும்பினான். ஆனால் அதற்குள் அவனது தலையில் துப்பாக்கியால் சுட்டு அவனது ஆயுதத்தையும் கைப்பற்றினேன்.

இந்த நேரத்திற்குள் ஜெகனும் எல்விற்றனும் இராணுவத்தினரின் மோட்டார் (எறிகணை) நிலையில் இருந்த இரண்டு இந்திய இராணுவத்தினரையும் சுட்டுவிட்டு அவர்களுடைய மோட்டாரையும் அவற்றிற்குரிய ஷெல்களையும் கைப்பற்றினர். அதுவரை எம்மால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை சுதனிடமும் கணேசிடமும் ஒப்படைத்துவிட்டு முகாமின் மறுபக்கம் சென்றோம். அங்கு இருந்த இந்திய சிப்பாய் ஒருவனையும் சுட்டுவிட்டு அவனது ஆயுதத்துடன் கணேசிடம் வந்து ஆயுதத்தைக் கொடுத்தோம்.

பின்னர் ஜெகனும் சுதனும் முகாமின் பின்புறமாக காந்தனுடைய அறையை நோக்கிச் சென்றனர். நானும் எல்விற்றனும் கணேசிடம் ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு, முன்புறமாக வீழ்த்தப்படாமல் இருந்த தங்கேசினுடைய பகுதியை நோக்கிச் சென்றோம். அங்கு தங்கேசுடைய அறையிலிருந்து மூவர் வெளியில் வந்து அறையின் ஓரத்தில் நின்று தாக்குதல் நடாத்திக்கொண்டிருந்தனர். மற்றைய இருவரும் வெளியில் வரவிடாதவாறு வாசலிற்கு முன்னால் உள்ள புளியமர மறைவிலிருந்து அம்முகாம் அதிகாரி அறை வாசலை நோக்கி SMG யினால் சுட்டுக்கொண்டிந்தான். உள்ளே உள்ள இரண்டு போராளிகளுக்கும் உதவியாக வெளியில் நின்று நாங்கள் அவ்வதிகாரியை

---

**வி**டுதலைப் புலிகளின் மாணவர் இயக்கமானது தேசிய சமூக விடுதலை என்ற பொது இலட்சியத்தில் தமிழீழ மாணவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி அவர்களை ஒருங்கிணைந்த தேசிய மாணவர் சக்தியாக அணிதிரட்டி தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இணைக்கும் நோக்குடனும் தமிழீழமாணவர்களுக்கு தேசியப்பற்றுணர்வை வளர்ப்பதற்காகவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மணலாறு, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் பின்வரும் வேலைத்திட்டங்களை ஆசிரியர்கள், விரிவுரையாளர்களின் ஆதரவுடன் மாணவர்களை முன்வைத்து வேலை செய்துகொண்டு வருகின்றது.

1. வறிய மாணவர்கள், இடம் பெயர்ந்த மாணவர்களின் நலன் கருதி கல்வி வளர்ச்சிக் கழகம் அமைத்தல்
2. அறிவியல் கருத்தரங்கு,
3. பேச்சுப் போட்டி
4. தடகள விளையாட்டுப்போட்டி ஆகியவற்றை நடத்துதல்
5. அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத் தேர்வு
6. யுத்தம் தீவிரமான காலங்களில் போராளிகளைப் பராமரித்தல், காப்பரண்கள் அமைத்தல், உலர் உணர்வு சேகரித்தல்.
7. வள அணி பயிற்சிக் கருத்தரங்கு (மாணவர்களுக்கு அரசியல், பொதுவிடயங்களை தெளிவு படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு) என்பனவாகும்.

மேலும் உலகநாடுகளிலுள்ள மாணவர் அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்படவும் இருக்கின்றது.

www.tamilarangam.net



நோக்கி சுடத்தொடங்கினோம். அதனால் அவ்வ திகாரியின் முதுகில் பல குண்டுகள் துளைக்க உடனேயே மாண்டு போனான். உள்ளே இருந்த இரண்டு போராளிகளும் உடனடியாக வெளியேறி அவர்களுக்கென வழங்கிய காவலரண்களை அழித்தொழிக்கத் தொடங்கினர்.

அம்முகாம் எங்கும் துப்பாக்கியினுடைய கர்ஜனையும், கைக்குண்டுகளின் பாரிய சத்தங் களும் காதுகளைச் செவிடாக்கின.

இதனிடையே முற்றாக கைப்பற்றப்படாமல் இருந்த தங்கேசினது பகுதியை நோக்கி எல்விற் றனை உதவிக்கு அனுப்பினேன். ஆனால் நான் எதிர்பாராதவிதமாக, சென்றுகொண்டிருந்த எல் விற்றினை நோக்கி அவனிற்கு மிகவும் அருகில் இருந்து இந்திய இராணுவத்தினரின் LMG ஒன்று குண்டுகளைக் கக்கத் துவங்கியது. இதனால் எல்விறன் அந்த இடத்திலேயே விழுந்து நிலை யெடுத்துவிட்டான். LMG காவலரணோ எனக்கும் தங்கேசிற்கும் இடைநடுவே அமைந்துவிட்டதால் என்னால் அதிகம் துப்பாக்கியினால் சுடமுடியாத ஓர் நிலையிலிருந்தேன். இதனால் அக்காவல ரண் மீது சில சூடுகளைச் சுட்டுவிட்டு என்னிடம் இருந்த கைக்குண்டொன்றை அக்காவலரண் மீது வீசினேன். அக்குண்டு காவலரணிற்குப் பின்புற மாக இராணுவத்தினரின் பாவனைக்காகப் போடப்பட்டிருந்த பாடசாலை மேசை ஒன்றின் மீது பட்டு வெளியிலேயே வெடித்துச் சிதறியது. இக்குண்டினால் உள்ளே இருந்த இராணுவத் தினரை எந்த விதத்திலும் சேதப்படுத்த முடிய வில்லை. நான் கத்தியபடி கைக்குண்டினை வீசியதை அக்காவலரணில் இருந்த இரண்டு இந்தியச் சிப்பாய்கள் கண்டுவிட்டனர். உடனடி யாக அவர்களின் கவனம் என்மீது திரும்பியது. அக்காவலரனுள் இருந்து இரண்டு SLR உம் LMG யும் என்னை நோக்கி ஒரேநேரத்தில் சுடத் தொடங்கின. இச்சூட்டில் இருந்து தப்புவதற்காக அருகில் இருந்த குறோட்டன் பூமரங்களுக்குள் என்னை மறைத்துக் கொண்டேன். இருந்த போதிலும் எனது தொடையில் சிறுகாயம் ஏற்பட் டது. இவை எதையும் கணக்கில் எடுக்காது அவ் LMG ஐ நோக்கி எனது துப்பாக்கியால் சுட் டேன். பின்னர் என்னை நோக்கி இரண்டு SLR-துப்பாக்கிகளாலும், எல்விற்றனை நோக்கி LMG-யாலும் தொடர்ந்து சுட்டபடி இருந்தார்கள். இந்த நேரத்தில் எனது கால்காயத்திற்கு சாரத் தைக் கிழித்து கட்டுப்போட்டுவிட்டு என்னிடம் எஞ்சி இருந்த அடுத்த கைக்குண்டினையும் எடுத்து கிளிப்பைக் கழற்றிய எனக்கு இந்த LM-G யை விழுத்தாவிட்டால் எல்விற்றனையும், இன்னும் பலரையும் பறிகொடுக்கவேண்டும் என் றும் இதனால் இத்தாக்குதல் தோல்வியிலேயே முடியும் என்பதும் மிகவும் தெளிவாக விளங்கி யது.



## மேஜர் கிண்ணி

நிமிர்ந்த நடை; உயர்ந்த தோற்றம்; சிரித்த முகம்; அன்பு சுமந்த நெஞ்சம். இன்று எம் மண்ணில் ஒரு விடுதலைக் கீற்றாக, ஒளியாக... எங்கள் மக்களின் மனதுகளில்.

1983 ன் காலப் பகுதிகளில் வன்னிப் பிராந்தியத்தில் மாத்தையாண்ணாவுடன் நின்று விடுதலைப் போரில் கலந்து கொண்ட கப்டன் முரளியின் சகோதரனாவார்.

இந்திய இராணுவத்துடன் நிகழ்ந்த சண்டைகளில் கிண்ணி எதிரியோடு நேருக்கு நேர் நின்று பொருதிய வீர நிகழ்வுகள் அவரின் திறமையாகச் சண்டையிடும் தன் மைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

1990ல் மேஜர் கிண்ணி, மேஜர் ஜேம்ஸுடன் தீவுப் பகுதியில் உதவிப் பொறுப்பாளராக இருந்தவர். சண் டைகளில் மிகத் திறமையான முறையில் பல சாதனை களைப் புரிந்து வந்தார். அவரின் அபாரத் திறமை, விவேகம் என்பன, அவரை விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையின் விசேட தளபதியாக முன்னிறுத்தியது. கோட்டை, பலாலி, தீவுப்பகுதி பரப்புக் கடந்தான் தாக்குதல்களில் இவரும் கலந்து நின்றார். ஒரு முறை பரப்புக்கடந்தானில் மிகப்பெரிய நேரடிச் சண்டை நிகழ்ந்து கொண்டிருந்தது. எதிரியை ஸ்தம்பிக் கச் செய்த அவ் மின்னல்வேகத் தாக்குதல்களில் இவர் சண்டையிடும் தன்மையை விடுதலைப் புலித் தோழர் களே வியந்து பேசினர். அந்த யுத்தத்தில் இவரின் உயிர்த் தோழன் ஒருவர் காயமடைந்து விடுகிறார். அவ ரைப் பராமரிக்கும் பணியை தன் தாயிடமே ஒப்படைத்து விடுகிறார். எழுந்து நடக்க முடியாத நிலைக்கு ஆக்கப் பட்ட அந்தத் தோழனின் பணிவிடைகளை கிண்ணியின் தாயார் மனங்கோணாமல் ஆற்றினார். நடக்க முடியாத நிலையில் இருக்கும் அந்தத் தோழனை சந்திக்கச் செல் லும் போதெல்லாம் தனது வாகனத்தை உபயோகிக்காமல் கால்நடையாகவே நடந்துசென்று சந்தித்து வருவார். சகதோழனின் உணர்வுகள் பாதிக்காது இருக்கும் வண் ணம் அவர் இவ்வாறு நடந்து கொள்வார். இன்றும் அந் தத் தோழன், இச்செயலை நன்றியோடு நினைவு கொள் கிறார். உயரிய மனிதனாகவும், சிறந்த போராளியாகவும் வாழ்ந்த மேஜர் கிண்ணி இயக்கச்சிப் பகுதியில் 10.07.92 அன்று மேற்கொள்ளப்பட்ட நேரடிமோதலில் வீரமரணத் தைத் தழுவிக் கொண்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மேஜர் கிண்ணி தோழர்களுடன் போர்முனையில்..

தொடர்ந்து அடுத்த நடவடிக்கையாக இராணுவத்தினர் எதிர்பாராத வேளை எதிர்பாராத விதமாக கைக்குண்டுடன் அவர்களுக்கு நேர் எதிரில் அவர்களை நோக்கி கத்தியபடி ஓடினேன். இதனால் நிலைகுலைந்து போய் நின்ற இராணுவத்தினர் சுயநினைவுக்கு வர முன்னரே இரண்டு SLR துப்பாக்கிகளின் மீது எனது இரண்டு கால்களையும் மிதித்து ஓர் கையினால் LMG ஐயும் இறுகப் பற்றினேன்.

LMG வைத்திருந்த இராணுவச் சிப்பாய் அதில் இருந்த ரவைகள் அனைத்தையும் வானை நோக்கிச் சுடத்தொடங்கினான். இதனால் LMG யை பிடித்திருந்த எனது பிடி சற்றுத் தளர்ந்தது. இதற்குள் அவன் மற்ற ரவை கூட்டை மாற்றி மீண்டும் சுட்டு என்னிடம் இருந்து LMG ஐப் பறிப்பதற்கு முயற்சித்தான். இந்த நேரத்தில் எனது கால்களின் கீழ் இருந்த இரண்டு துப்பாக்கிகளையும் இழுத்து பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால் எனது பிடி முந்திய பிடியை விட இறுகியது. நான் கையை விட்டாலோ அல்லது காலை எடுத்தாலோ என்னைச் சுட்டுவிட்டு மீண்டும் உள்ளே உள்ளவர்களையும் எல்விற்றனையும் சுட்டுக் கொன்றுவிடுவார்கள். இதனால் இத்தாக்குதல் தோல்வியில் முடிந்துவிடும் என்பதால் எனது கையில் வெடிப்பதற்குத் தயாரான நிலையில் இருந்த கைக்குண்டினை வெடிக்க வைப்பதற்காக LMG யுடன் இழுபறிபட்டுக் கொண்டிருந்த சிப்பாயின் முகத்திற்கு நேராக பிடித்து மெது, மெதுவாக குண்டினது லிவரை கைவிட்டேன். இதனை பார்த்ததும் சிப்பாய்கள் மூவரும் பயத்தினால் உடனடியாக துப்பாக்கிகளைப் பறிப்பதை நிறுத்திவிட்டு கைகளை மேலே தூக்கி சரணடைந்தனர்.

அப்போதுதான் இவர்களின் பின்னால் இறந்தது போல் அதுவரை இருந்த ஓர் இந்திய இராணுவ வீரன் தனது கைகளில் SMG உடன் கைகளை உயர்த்தி சரணடைந்தான். அவ்வீரன் நினைத்திருந்தால் என்னை எப்போதோ சுட்டுக் கொன்றிருக்கலாம். ஆனால் கூலிக்காக சண்டையிடும் அவன் சாவதற்குத் துணிவின்றி என்னைச் சுடாது பயத்தினால் படுத்துக் கிடந்துவிட்டான்.

இவர்கள் நால்வரையும் பார்க்கும் போது எனக்கு அந்த நேரத்திலும் பயத்துடன் கலந்த சிரிப்பு வந்தது. ஏனெனில் அவர்கள் பயத்தினால் சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தனர்.

அந்நால்வரில் இருவர் கடைசி முயற்சியாக என்மீது பாய்ந்து என்னை வீழ்த்த எத்தனித்தனர். ஆனால் கைக்குண்டு இருந்த கையினால் எனது துப்பாக்கியை தோளில் இருந்து எடுத்து அவர்களை நோக்கிச் சுட்டேன். கைக்குண்டுடன் பிடித்து சுட்டதனால் குறிதவறி LMG மீதும் ஒருவனது கையிலும் பட்டுவிட்டது.

LMG இருந்த கைக்கு எனது துப்பாக்கியை மாற்றிவிட்டு, எனது கையில் இருந்த கைக்குண்டை பாதுகாப்பான வேறு இடத்திற்கு எறிந்தேன். கைக்குண்டு வெடிக்காததினால் அதனை நோக்கிச் சென்றேன். மழையில் நனைந்திருந்தபடியினாலேயே அக்கைக்குண்டு வெடிக்கவில்லை. இவ்வெடிக்காத கைக்குண்டினால்தான் அம்முகாமின் முக்கிய காவலரண் ஒன்றில் இருந்த சிப்பாய்களைப் பயமுறுத்தி அவர்களது உயிர்களையும் ஆயுதங்களையும் பறிக்க முயன்றதை நினைத்து இப்போதும் ஆச்சரியப்படுவேன்.

பின்னர் நானும் எல்விற்றனும் தங்கேசினுடைய பக்கம் சென்றோம். அங்கு அனைத்துக் காவலரண்களையும் அழித்துவிட்டு அங்கிருந்த சிப்பாய்களினது உடல்களை காவலரணிற்கு வெளியால் இழுத்து நிரையாக அடுக்கியபடி "எமக்குரியது எல்லாம் கிளியர் பண்ணியாச்சா?" எனக் கேட்டுக் கொண்டே எங்களைப் பார்த்து சிரித்துக்கொண்டு நின்றார் தங்கேஸ்.

பின்னர் நாங்களும் தங்கேசினுடைய சில பேருமாக காந்தனுடைய பக்கம் சென்றோம். அங்கு காந்தனும், தேவனும் கைகளில் காயமடைந்த நிலையில் இராணுவத்திடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களால் மீண்டும் மீண்டும் சுட்டுக்கொண்டிருந்தனர்.

நாங்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது எமது போராளிகள் எல்லோரும் முகாம் முற்றாகக் கைப்பற்றப்பட்டு விட்டதாக முழக்கமிட்டுக் கத்திய வண்ணம் என்னை நோக்கி ஓடி வந்தனர். அவர்களிடம் அகப்பட்டால் என்னைத் தூக்கி தோளில் வைத்து சந்தோஷத்தில் கத்தி ஆரவாரம் செய்வார்கள் என்பதனால் நானும் தங்கேசும் அருகில் இருந்த கட்டிடங்களுக்குள் ஓடி

www.tamilarangam.net



ஒளிக்க எத்தனித்தோம். ஆனால் தப்பிக்கமுடியவில்லை.

அந்நேரம் சந்தைப்பக்கமாக நின்ற போராளி ஒருவர் சுட்டப டியே ஆமிக்காரன் ஓடுகிறான் என உரக்கக் கூவி எங்களை அழைத் தான். உடனடியாக அந்த இடத் திற்கு ஓடிச் சென்ற நாங்கள் சுமார் எட்டுப்பேர் அச் சிப்பாயை நோக்கிச் சுட்டோம். ஆனால் ஒருவரது குண்டும் அச்சிப்பாயைத் தாக்கவில்லை. அவன் அருகில் இருந்த பிரதான முகாமிற்கு தப் பிச் சென்றுவிட்டான்.



இரண்டு மூன்று சிப்பாய்கள் இத்தாக்குதலின் போது தமது துப் பாக்கிகளை தூரவீசிவிட்டு முகா மிற்குள் குறுக்கும் நெடுக்குமாக எமது போராளிகளிடம் அகப்படா மல் ஓடித்திரிந்தனர். இவர்களை எமது போராளிகளும் பின்னால் துரத்தித்தான் பார்த்தார்கள். ஆனால் பிடிக்க முடியவில்லை. ஏனெனில் இவர்களைச் சுட்டால் உள்ளே குறுக்காக நடமாடித் தாக் கும் எமது போராளிகளையும் தாக் கக்கூடும் என்பதனால் சுடாம லேயே துரத்திப் பிடிக்க எத்தனித் தனர். இவர்கள் துரத்தப்படும் போது எமது போராளிகளுடன் இராணுவத்தினர் ஒரு சில சமயங் களில் மோதுப்பட்டு விழுந்த துண்டு. பின்னர் இவர்கள் முட் கம்பி வேலியைத் தாண்டுபோது சுட்டு வீழ்த்தப்பட்டனர். இவர்கள் துரத்தப்படுவதைப் பார்த்தால் சிறுவயதில் அடித்துத் தொட்டு விளையாடுவதைப் போல் உள்ள தாக தங்கேஸ் கூறிச் சிரித்தார்.

பின்னர் நவத்தை எம்மிடம் வரும்படி வோக்கியில் கூறிவிட்டு நாங்கள் காவலரண்களைப் பார்ப் பதற்குச் சென்றோம். அங்கிருந்த இராணுவத்தினரின் உடல்கள் அனைத்தையும் ஒரிடமாக அடுக் கிவிட்டு கைப்பற்றிய ஆயுதங்க ளையும் ஒரிடமாக அடுக்கி கணக் குப் பார்க்கத் தொடங்கினோம். அதேவேளை நவமும் வந்து எம் முடன் சேர்ந்துகொண்டார். பதி னொரு நிமிடங்களே நடந்த எமது தாக்குதலைப் பற்றிப் பாராட்டி விட்டு காயமடைந்தோரை அப்பு றப்படுத்தும் பணியில் ஈடுபட்டார்.

அப்போது பிரதான முகா மில் இருந்து நாம் கைப்பற்றிய மினிமுகாமை நோக்கி இராணுவத் தினர் பெரிதாகப் படையெடுத்த னர். எனது காயத்திற்கு கட்டுப் போட்டுக்கொண்டு, கைப்பற்றிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு நாம் கைப்பற்றிய மினிமுகாமை விட்டு போராளிகள் அனைவரை யும் கூட்டிக்கொண்டு வெளியேறும் படி நவத்திடமும் தங்கேசிடமும் கூறிவிட்டு நானும் எல்விற்றனும் 10 போராளிகளுடன் முன்னேறும் இராணுவத்தினருடன் போரிடச் சென்றோம்.

நெடுங்கேணிச் சந்தியில் வைத்து முன்னேறிய இராணுத் தினரை வழிமறித்துத் தாக்கி னோம். 1/2 மணி நேரம் இடை விடாது தாக்கி இராணுவத்தின ரின் முன்னேற்றத்தினைத் தடுத் தோம். பின்னர் எம்மை தாக்கு தலை இடைநிறுத்திவிட்டு அவ்விடத்திலிருந்து பின் வாங்கும்படி நவத்திடம் இருந்து கட்டளை வந்தது. நாங்கள் வந்த காரியம் வெற் றிகரமாக முடிந்ததனால் நாமும் உடனடியாகப் பின் வாங்கினோம்.

இத்தாக்குதலில், மினி முகாமில் 19 இராணு வத்தினரும், உதவிக்கு வந் தவர்களில் மூன்று இராணுவ வீரர்களும் மொத்தம் 22 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

28 இராணுவத்தினர் உள்ள மினிமுகாமில் தாக் குதல் நடத்துவதற்கு 3/4 ம ணி (45 நிமிடம்) நேரத் திற்கு முன்பாகத்தான் எட்டு இராணுவத்தினர் வவுனியா பிரதான வீதியில் ரோந்து சென்றனர். இதனால் இவர்கள் இத்தாக்குதலில் அகப்பட வில்லை.

ஆனால் இத்தாக்குதலில் நாம் சற்றும் எதிர்பாராத வித மாக, பிரதான முகாமிலிருந்து முன்னேறிவந்த இராணுவத்தி னரை வழிமறித்து தாக்கும் போது அவர்களது 60 MM மோட்டார் ஷெல் ஒன்று நவத்திற்கு மிகவும் அருகாக விழுந்ததால் நவம் தொடையில் காயமடைந்தார். பின் னர் இவர் இந்தியா கொண்டுசெல் லும் வழியில் கடலில் வீரமரண மடைந்தார். இத்தாக்குதலில் லெப். கேணல் நவம் மாத்திரமே வீரமரணமடைந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமுதாயக் கண்ணோட்டம்



காலம் காலமாக பெண்கள் மீது திணிக்கப்படும் ஒடுக்குமுறை வடிவங்களில் ஒன்றுதான் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறையாகும். ஆண் இனம் பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்கு கையாளும் மிகவும் கொடுமையான, அநீதியான வழிமுறைகளில் ஒன்றுதான் இந்த வன்முறை. இந்த வன்முறையானது பெண்களின் உரிமையை, சுதந்திரத்தை, கௌரவத்தை மீறும் ஒரு பாரதூரமான இழிசெயல் மட்டுமன்றி ஆண் ஆதிக்கத்தை பெண்கள் மீது திணிக்கும் அதிகாரப் பிரயோகச் செயற்பாடு என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பெண்கள் மீதான இந்த வன்முறைப் பிரயோகம் பல வடிவங்களில், பல பரிமாணங்களில் தாண்டவமாடுகிறது. சமூக வாழ்வின் மூலக்கூறான குடும்ப அமைப்பை எடுத்துக்கொள்வோம். இந்தக் குடும்ப உறவும் ஆண் ஆதிக்க உறவு வலைகளால் பின்னப்பட்டிருக்கிறது. இந்த உறவுகளிலும் பெண்களுக்கெதிரான வன்முறையின் கோரமான வெளிப்பாடுகளை நாம் காணலாம். கணவன் மனைவிக்கு உதைப்பதும், அண்ணன் தங்கைக்கு அடிப்பதும், தந்தை மகளை துன்புறுத்துவதும் இப்படியாகப் பெண்கள் குடும்பச் சூழலுக்குள் வதைக்கப்படுகிறார்கள். எமது பண்பாட்டுக் கோலங்கள், பழமைவாதக் கோட்பாடுகள், மூடநம்பிக்கைகள் ஒட்டுமொத்தத்தில் ஆண்களால் படைக்கப்பட்ட 'மனிததர்ம' சாஸ்திரங்கள் எல்லாம் ஆணாதிக்க வன்முறையை நியாயப்படுத்தத் தவறுவதில்லை.

எமது சமூக வாழ்வில் ஆண் - பெண் உறவு வெறும் ஆதிக்க உறவாக, அடிமைத்தனத்தின் உறவாக, பெண்களை இழிமைப்படுத்தும் உறவாக, அமையப்பெற்றிருக்கிறது. தாம்பத்திய தர்மம் என்றும், அறநெறி வாழ்வு என்றும் சித்தாந்த ரீதியில் பெண்ணினத்தைக் கறைப்படுத்தி வைத்திருப்பதோடு, இந்த ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆணினம் வன்முறையையும் கையாண்டு வருகிறது. ஆணின் வன்முறையையும் ஒரு பண்பாட்டுக் கோலமாக, குடும்ப, சமூக உறவுகளின் தவிர்க்கமுடியாத ஒரு தண்டனையாக, நிர்ப்பந்தமாக பெண்ணினமும் அதனைச் சகித்து வருகிறது. சாதாரண வாழ்வின் சாதாரண நிகழ்வு என்ற ரீதியில் தனக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் வன்முறையைப் பெண்ணினம் ஜீரணித்துக்கொள்கிறது. இந்த மனப்பான்மை பெண்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. முதலில், பெண்ணினம் இந்த அடக்குமுறை வடிவத்தின் கொடூரத்தை, அநீதியைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அண்மையில் எம்மிடம் ஓர் வழக்கு விசாரணைக்கு வந்தது. ஓர் ஆண் தனது இரண்டாவது மனைவியை தென்னம் மட்டையால் அடித்தபோது அந்தப் பெண் இறந்துவிட்டாள். அப்பெண் ஓர் நோயாளியாக இருக்கும் போது இந்தக் கொடுமை நடந்தது. திட்டமிட்ட கொலையை விட இது மோசமானதாகும். மனிதத் தன்மையே இல்லாமல் அந்தக் கணவன் நடந்திருக்கிறான்.

இது எம்மிடம் வந்த வழக்குகளில் ஒன்று என்பதால் இப்படி ஒரு கொலை நடந்தது தெரிந்துள்ளது. எமக்குத் தெரியாமல் மறைமுகமாக இப்படி எத்தனை கொலைகள் நடந்திருக்கும். ஒரு குடிகாரக் கணவன் பல தடவைகளில் தனது துன்புறுத்தல்களினால் மனைவியைக் கொலைசெய்ய முயன்றிருப்பான். குடிகாரன் ஒருவன் குடித்துவிட்டு வந்து கத்துவதும், பாத்திரங்களைத் தூக்கி எறிவதும் மனைவி பிள்ளைகளுக்கு அடிப்பதும் பக்கத்து வீடுகளுக்குத் தெரியக்கூடியதாக இருக்கும். சில வீடுகளில் கணவன் மனைவிக்கு அடிப்பது எவருக்குமே தெரியவராமல் இருப்பதுண்டு. இப்படிப் பல வன்முறைகள் பல வீடுகளில் மௌனமாக அரங்கேறி வருகிறது. ஆனால் பெண்களோ தமக்கு குழந்தைப் பருவத்தில் சொல்லித் தந்த 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற பழமைக் கருத்துக்களிலிருந்து விடுபடப் பயந்து கணவனின் கொடுமைகளைச் சகித்து வாழ்ந்து வருகிறார்கள்.

வீட்டுக்குள் நடக்கும் பண்பற்ற, மனிதத் தன்மையற்ற செயல்கள் போன்ற சில வன்முறைகள் வெளியேயும் ஆங்காங்கே சில இடங்களில் நடக்கின்றன என்பதை அண்மைக்காலத்து சில நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன....

யாழ்ப்பாண சந்தி ஒன்றில், சைக்கிளில் வந்த மாணவியை இடை நிறுத்தி, ஓர் மாணவன் அவள் கன்னத்தில் பல அறைகள் கொடுத்துத் தாக்கினான். இந்த நிகழ்வு மிகவும் அண்மைக்காலத்துச் சம்பவம். படித்த மாணவன் ஒருவனின் பண்பற்ற செயல் இது. அதனையிட்டு பெண்கள் எவரும் எந்தவிதமான எதிர்ப்புக் குரலையும் காட்டவில்லை. அப்படி எதிர்த்துக் குரல் கொடுக்காதது மட்டுமல்ல, அப்பெண்தான் தவறான நடத்தையுள்ளவள் என்பது போன்ற கதைகளைக் கூறி தாம் எதிர்த்துக் குரல் கொடுக்காததற்கு காரணம் அதுதான் என்பது போலும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அதனைத் தொடர்ந்து வீதியில் பெண்களைத் துன்புறுத்தும் நிகழ்வுகள் வேறும் நடந்து கொண்டிருக்கின்றன. பெண்கள் இதனையிட்டுப் பெரிதாக அக்கறை எடுக்காமல் விடுவார்களேயானால் வீதியில் ஆண்கள் பெண்களுக்கு அடிக்கும் சம்பவங்கள் சர்வசாதாரணமாகிவிடும்.


தவறான நடத்தையுள்ள ஒரு பெண்ணுக்குக் கூட அடிப்பதற்கு ஆணுக்கு உரிமையில்லை என்ற விடயம் கூட எம்மில் பலருக்குத் தெரியவில்லை. இதே சம்பவம் மேலைத்தேச நாடுகளில் எங்காவது நடந்திருக்குமேயானால் இவ்வாறு அடித்த ஆணுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்கே போடப்பட்டிருப்பது மட்டுமல்ல அந்த ஆணுக்குரிய தண்டனையும் வழங்கப்பட்டிருக்கும். அவ்வளவும் மட்டுமல்ல அவனுக்கெதிராக பெண்களின் ஒருங்கிணைந்த எதிர்ப்பு ஊர்வலமே நடத்தி முடிக்கப்பட்டிருக்கும்.

எமது பெண்களால் ஏன் இவ்வாறு எதிர்த்து எதுவுமே செய்யமுடியவில்லை? தன்னைக் கொல்ல கணவன் முயன்றால் கூட அவனுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கக் கூட பெண்களுக்கு துணிவு ஏற்படுவதில்லை. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக விளங்குவது அவர்களது மனங்களில் ஊட்டப்பட்டு பதிவிக்கப்பட்ட பழமைக் கருத்துக்களேயாகும்.

'கணவன் தானே; அடிக்க உரிமை இருக்கிறது. அடிக்கின்றார்' என்று மனைவி நினைப்பதும், 'அப்பா தானே அவர் அடிப்பதில் என்ன தவறு இருக்கின்றது?' என மகள் எண்ணுவதும், 'அண்ணா தானே உதைத்தாலும் நான் பொறுத்துக் கொள்ள வேண்டும்' என தங்கை யோசிப்பதும் சாதாரண விடயங்கள் போல் தெரியலாம். ஆனால் தாம் பெண்களாயிருப்பதால் தம்மீது செலுத்தப்படும் அடக்குமுறையின் ஓர் வடிவம்தான் என்பதை பெண்கள் ஒவ்வொருவரும் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அரசபடை தமிழீழப் பெண்களை பாலியல் வன்முறைக்குட்படுத்தினால் குமுறிக் கொந்தளித்து வெடிக்கக் கூடியவர்களாக எமது பெண்கள் இல்லாததும் வேதனைக்குரிய விடயமாகும்.

பெண்ணினத்தை பொறுத்தவரை இந்த உள்ளப்பாங்கு அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடக்



## வீடுகளில் கல்விப் போதனை

மணலாறு மாவட்டத்திலுள்ள செம்மலை, அலம்பல், குமுழமுனை ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகள் ஸ்ரீலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சினால் தகர்க்கப்பட்டுள்ளதால் இப்பகுதிகளிலுள்ள வீடுகளில் வைத்தே மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இராணுவ அச்சுறுத்தல்கள் மத்தியிலும் இப்பகுதிப் பாடசாலைகள் இயங்கி வருகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குமுறையின் ஒரு பாதிப்பு என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. தனது தாயோ, சகோதரியோ, மகளோ சந்தியில் வைத்து ஒரு ஆணால் அடிக்கப்பட்டால் ஒரு பெண்ணால் குமுற முடிகிறது. குடும்பம் என்ற வட்டத்துக்குள் ஒருவருக்கு நிகழ்ந்தால் பாசம் இப்படி குமுற வைக்கிறது. ஆனால் அதற்கப்பால் அநீதிக்கெதிராக குரல் எழுப்பும் துணிவுகூட அவளுக்கு வருவதில்லை. ஏனென்றால் அப்படி அவள் வளர்க்கப்படவில்லை. சிறிய வயதில் ஒரு அநியாயத்தைக் கண்டு குமுறி ஒரு பெண் கதைக்கப் புறப்பட்டால் கூட "நீ பொம்பிளைப் பிள்ளை இப்படி அடக்க ஒடுக்கமில்லாமல் உரக்கக் கதைக்கக் கூடாது" என்று பெற்றோர் தடுத்து விடுவார்கள். இளம் வயதில் அவ்வாறு ஏதாவது கதைக்கத் துடித்தால், "இப்படிக் கதைச்சு வாய்க்காரி என்ற பெயரை எடுத்துப் போடாதை. பிறகு கலியாணம் கட்ட ஒருத்தரும் வர மாட்டாங்கள்" என்று சொல்லி வாய்க்கு பூட்டுப் போட்டுவிடுவார்கள்.

இப்படி படிப்படியாக அடக்குமுறைக் கருத்துக்களால் வளர்க்கப்பட்ட பெண்ணால் எப்படி திடீரென சமூகத்தில் நிகழும் அநீதிக்கெதிராக குரல் கொடுக்க முடியும்.

அது மட்டுமல்ல வீட்டில் ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் "பெண்கள் சரியாக நடக்காததால் அப்படி நடந்தது" என்ற பெரும்பழியை பெண்மீது சுமத்துவார்கள். இதற்கு உதாரணமாக 'பொம்பிளை சிரிச்சாப் போச்சு-புகையிலை விரிச்சாப் போச்சு' 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்று பெண்களை அடக்கப் பயன்படுத்தும் பழமொழிகளைக் கூறலாம். இப்படியான சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட பெண்களால் எப்படி ஆண்மேல் பழியைச் சுமத்த முடியும்? அவன் செய்தது குற்றம்தான் என்பதை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்.

ஆண்களின் தொகையை விட அதிகமான அளவில் பெண்கள் வாழ்ந்தும் இன்று தேசவிடுதலைப் போராட்டத்தில் பெண்கள் குறைவென்றால் அதற்கு காரணம் பெண்கள் இவ்வாறு மூடக்கருத்துக்கள் ஊட்டப்பட்டு மனதில் பதிவிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட சூழ்நிலைதானாகும்.

இந்த மூடக்கருத்துக்களிலிருந்து பெண் முதலில் விடுவிக்கப்பட வேண்டும். அப்படி விடுவிக்கப்பட்டால்தான் தமது தேசம் அன்னியனால் ஆக்கிரமிக்கப்படுவதை தடுத்தே ஆக வேண்டிய கடமை தமக்கும் உண்டு என்ற உணர்வு அவர்களுக்கு உண்டாகும்.

முதலில் பெண்கள் தம்மீது பிரயோகிக்கப்படும் ஒடுக்குமுறை வடிவங்களை சரியாக இனங்கண்டு கொண்டு அவற்றுக்கெதிராக போராட முன்வரவேண்டும். ஒடுக்குமுறை அம்சங்களை தமது தலைவிதி என்று சொல்லிக்கொண்டு ஒவ்வொரு பெண்ணும் அடங்கி ஒடுங்கி பதுமைகளாக இருப்பார்களேயானால் அவர்கள் தமது வாழ்வை மட்டும் இழக்க மாட்டார்கள்; சொந்த தேசத்தையும் பறிகொடுத்துவிட்டு நிற்கவேண்டி வரும்.

வீடு என்ற குறுகிய வட்டத்தை விட்டு வெளியே வந்து சமூகவேலைகளில் பங்குபற்றும் போது வீட்டுக் கடமை மட்டும் தான் தனக்கு உண்டு என்ற மன நிலையை மாற்றி நாட்டுக் கடமையும் தனக்கு உண்டு என்ற உண்மையை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்துகொள்ள வேண்டும். உண்மையை உணர்ந்துகொண்ட பெண்கள் ஒரணியில் இணையும்போது பலம் பொருந்தியவர்களாகிறார்கள். அந்தப் பலம் அவர்களுக்கு அநீதியை எதிர்க்கும் தைரியத்தைக் கொடுக்கும்.


காலா காலமாய்
அடுக்களைக்குள்
சமூகத்தின் அடக்குமுறைச்
சட்டத்துக்குள்
ஒடுங்கிச் சிதைந்தவள்
இரத்தம் சிந்தி
விடுதலைச் சுவடு பற்றி
ஈழத்தில் எழுந்தனள் பார்!



ஓவியம்:
தயா,
தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



[illegible]



[illegible]



தமிழ் பிரதேச...
எழுச்சிகரமாய்க்...
நிகழ்வினில் உண...
கலந்து...

www.tamilarangam.net

கள்
ழுச்சி





நான்கு இலட்சம் தமிழ் மக்களை
பட்டினிச் சாவிற்குத் தள்ளும்
மனிதாபிமானமற்ற நிலைப்பாட்டை
வன்மையாகக் கண்டித்து மக்கள்
போராட்டம் நடத்துகின்றனர்

...யா
...கழ்ச்சியில
...க்கள்



முத்தமிழ் விழாவில் கலந்து கொண்ட மக்கள்

www.tamilarangam.net

# விடுதலைப்போரில் ஒரு தாய்



## திருமதி. கா. சிவக்கொழுந்து.

ஆரம்ப காலத்தில் எமது விடுதலைப் போராட்டம், தலைமறைவுப் போராட்டமாக இருந்தது. பின்னர் கெரில்லாப் போராட்டமாக மாறி, இப்போது மரபுவழிப் போராக மாறியுள்ளது. ஆனால் ஒன்று மட்டும் மாறவில்லை. அதுதான் மக்களின் ஆதரவு எனும் மாபெரும் சக்தி. ஆனால் மக்கள் தமது ஆதரவை களத்திலே நேரடியாகக் காட்டியது, ஆனையிறவுப் போரின்போதுதான். போரில் காயமடைந்த போராளிகள் அலறித் துடிக்கும் போது எம்மால் வீட்டில் சும்மாயிருக்க முடியாது என்று சொல்லி வைத்தியசாலையில் தொண்டாற்ற வந்த அன்னையர்களில் ஒருவர் தான் திருமதி. சிவக்கொழுந்து அவர்கள்.

எப்போது போனாலும் வைத்தியசாலை வாட்டுக்களில் இவரைக் காணலாம். ஒரு பெண் தனது வீட்டுக் கடமைகளை விட்டு நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நாள் முழுதும் சேவை செய்யத் தயாராக இருக்கிறாள் என்றால், அந்தப் பெண்ணின் சமூக உணர்வையும், பரந்த மனப் பான்மையையும் நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

விடுதலைப் போரில் பெண்களின் பங்களிப்பு மிக மிகக் குறைவாக இருந்த காலம் அது. எமது விடுதலைப் போராட்டத்தை வெளிப்படையாக ஆதரிக்க அஞ்சிய நேரம். அந்த வேளையிலும் சிலர் துணிவுடன் எமக்கு ஆதரவாகச் செயற்பட்டனர். எமது போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்துகொண்டு, எமக்கு படிப்படியாக முல்லைத்தீவில் ஆதரவைத் தேடித்தந்தார்கள். அந்தச் சிலரில் திருமதி. சிவக்கொழுந்து அவர்களும் ஒருவர்.

இலங்கை அரசினதும், இராணுவத்தினதும் மனித உரிமை மீறல்களை எதிர்ப்பதற்காக தமிழீழமெங்கும் அன்னையர் முன்னணி தோற்றம் பெற்றபோது, முல்லைத் தீவில் திரண்டெழுந்த அன்னையரை வழி நடத்திச் செல்லும் பொறுப்பை இவர் ஏற்றார்.

1987 இல் லெப். கேணல் திலீபனுக்கு ஆதரவாக முல்லைத் தீவில் திருச்செல்வம் உண்ணாவிரதமிருந்து கொண்டிருந்தபோது முல்லைத்தீவு மக்களெல்லோரும் அங்குள்ள இலங்கை இராணுவ முகாமைத் தொடர்ந்து ஒரு வாரத்துக்கும்மேலாக மறியலில் வைத்திருந்தனர். கிளர்ந்தெழுந்த மக்களோடு இணைந்து திருமதி. சிவக்கொழுந்து அவர்களும் அந்த மறியல் போரில் கலந்துகொண்டார்.

மணலாறு காட்டுப் பகுதிக்குள் எங்கள் தலைவர் மறைந்திருப்பதாகச் சந்தேகித்த இந்திய இராணுவம், காட்டுக்குள்ளே வாழ்பவர்களுக்கும் மக்களின் குடிமனைகளுக்கும் இருக்கக்கூடிய தொடர்பைத் துண்டிக்குமுகமாக அளம்பிலிலும் செம்மையிலும் இரு முகாம்களை அமைத்தது. மேலும் காட்டுப் பகுதிக்கு உணவுகள் போகாவண்ணம் மணலாறு பிரதேசத்தின் மீது பொருளாதாரத் தடையை விதித்தது. அத்துடன் தொடராக 27 நாட்கள் கடும் ஊரடங்கு உத்தரவையும் பிறப்பித்தது. தம்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடையை எதிர்த்து முல்லைத்தீவு மக்கள் அணி திரண்டனர். 'இந்திய இராணுவமே வெளியேறு', உட்பட பல கோஷங்களுடன் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை மிலேச்சப் படை ஒன்றின் ஊரடங்கு உத்தரவையும் மீறி நடத்தி முடித்தனர். இந்திய இராணுவத்தினரின் காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகளின் மத்தியிலும் ஒரு பெண்கள் அமைப்பு, மாபெரும் ஊர்வலத்தை நடத்தி, இந்திய முகாம் பொறுப்பதிகாரிகளுடன் வாதிட்டு, தமது கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது என்றால், அந்தப் பெண்கள் தம் நலனைவிட, நாட்டு மக்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நல்வாழ்வை எவ்வளவு தூரம் நேசித்தார்கள் என்பது எமக்கு விளங்கும். இந்திய இராணுவத்தினருக்கு ஈழத்து அன்னையரின் மனஉறுதியைக் காட்டிய சம்பவங்களுள் ஒன்றான இதில், திருமதி. சிவக்கொழுந்து அவர்களின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

சென்ற வருடம் பேரெழுச்சியுடன் விடுதலைப் புலிகள் நடத்திய முத்தமிழ்விழாவின்போது ஒழுங்குகளைக் கவனிக்கும் பணியைச் செய்வதற்காக, முல்லைத்தீவிலிருந்து வந்த அன்னையர்களில் இவரும் ஒருவர்.

ஆனையிறவு மோதல் ஆரம்பமானபோதும் கூட, காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கும் நோக்குடன் முல்லைத்தீவிலிருந்து அன்னையர் குழு ஒன்று வந்தபோது தனது சுகயீனமான உடல்நிலையையும் பொருட்படுத்தாது திருமதி. சிவக்கொழுந்து அவர்கள் புறப்பட்டு வந்துவிட்டார். வரும்போது பூநகரிப் படகுத்துறையாலேயே வரவேண்டியிருந்தது. அப்போது அவர் "போகும்போதுதான் இந்தப் பாதை ஆனால் வரும்போது ஆனையிறவுப் பாதையால் வரலாம்" என்று சொல்லியவாறு உற்சாகமாகவே வந்தார்.

இரத்த அழுத்தம், மார்புப் புற்றுநோயும் தம்மைத் துன்புறுத்தியதையும் பொருட்படுத்தாது, காயமடைந்து வருகின்ற போராளிகளைப் பராமரிக்க வேண்டும் என்பதற்காகவே அவர் தன்னை வருத்திக் கொண்டார். இவரது நோயைப் பார்த்த நாம் இவரைத் திரும்பிப் போகுமாறு கூறியபோதும், மறுத்து விட்டார். ஆனையிறவு மோதல் முடிவடைந்து 2 வாரங்களின் பின்னரேயே, அதுவும் மிகுந்த மனவருத்தத்துடனேயே, "திரும்பிப் போகும் போது ஆனையிறவு வழியாகப் போகலாம் என்று நினைத்தேன், ஆனால் எவ்வளவோ இளம் உயிர்களைப் பறிகொடுத்துவிட்டுப் போகிறோமே", என்று சொல்லியவாறு போனார்.

ஊருக்குத் திரும்பியதும் அவரது நோய் அவரைப் பலமாக வருத்தியது. இறுதியில் அவர் தனது நோய்க்குப் பலியாகிவிட்டார்.

இந்த உயர்ந்த அன்னைக்கு அனைத்துத் தமிழீழப் பெண்களின் சார்பிலும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.



# அக்காச்சி குடியிருப்பு

"நாங்கள் கஷ்டத்தை அனுபவித்தோம். இப்போது இந்தக் குடியிருப்பு மனைகளைத் தந்த தமிழீழ விடுதலைப் புலிகளால் நிம்மதியாக கஷ்டமின்றி வாழ்கிறோம்." இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்ட பத்திரிகையாளர் மத்தியில் மேற்படி அக்காச்சி குடியிருப்பில் வசிக்கும் பெரியவர் ஒருவர் கூறினார்.

உச்சி வகிர்ந்தது போன்று ஒரு அகலமான நேர்ப்பாதையில் அக்கமும் பக்கமுமாக சீமெந்தால் கட்டிய 28 வீடுகளும், 3 குடிசைகள், பணிமனை, பாலர் பாடசாலை, சிறுவர் பூங்கா, நூலகம், முதலுதவி நிலையம், வேலை வாய்ப்பு நிலையம் என்ற ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் சேவை நிலையங்களும் அமைந்துள்ளது.

இப்பகுதியில் உள்ள மூலப் பொருளான சம்புப் புல்லை அறுவடை செய்து புற்பாய்கள் செய்வது போன்ற தொழில்களில் ஈடுபடுவதற்கான தொழிற்சாலை ஒன்றும் விடுதலைப் புலிகளினால் நிறுவப்பட்டுள்ளது. கடந்த மாசிமாதம் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலையில் 7 தறிகளில் ஒரு நாளைக்கு 75 பாய்கள் செய்யப்படுகிறது என்று குடியிருப்புப் பொறுப்பாளர் சிறிகுமார் தெரிவித்தார்.

உவர் தரை, உவர் நீர்தான் இக்கிராமத்தின் பிரச்சனை என்ற போதிலும் இனிவரும் காலத்திலாவது இப்பகுதியை சோலையாக்குவோம் என்ற நம்பிக்கையின் உழைப்பில் ஓரளவு தன்னிறைவோடு வாழ்கிறார்கள்.

கடந்த திலீபனின் ஐந்தாவது நினைவு நாளன்று தொடக்கம், குடிநீர் குழாய் மூலம் கொண்டுவரப்பட்டு பின் பவுசர் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

www.tamilarangam.net



# ஒரு அன்னையின் ஆவல்

அன்பு மைந்தனே பிரபாகரா - நான்
அழைக்கும் குரல் உனக்குக் கேட்கிறதா ?
உன்போல் ஒரு மகனை ஈன்றெடுத்த - அந்த
உத்தமி நானாக இருக்கக் கூடாதா ?

அறுபது வயது ஆகப்போகிறது
அச்சம் என்மனதை அரித்துக் கொல்கிறது
பொறுமையும் மறைந்து போகப்போகிறது
புவியினில் என்னுடல் சாயப்போகிறது

ஒரே யொரு ஆசை தீர்த்து வைப்பாயா ?
உன்முகந்தனைக் காட்டி நிற்பாயா ?
உரையடா மகனே உனக்கிந்த உலகில்
உள்ள அன்னையா ஒருவரா இருவரா ?

நானுமுன் னன்னையென வேற்றுக் கொள்வாயா?
நாளொன்று மட்டுமென் அருகிருப்பாயா ?
வான்புகழ் கொண்டவுன் வடிவத்தைக் கைகள்
வாஞ்சையோ டணைத்திட வழிவகுப்பாயா ?

களத்தினில் ஏகிய கால்களைப் பிடித்துக்
கனிவுடன் தடவத் தவிக்கிறேன் மைந்தா
உளத்தினில் அமைதி இல்லையே எந்தன்
உயிர் பிரிவதன்முன் தரிசனம் உண்டா ?

துவக்கினை ஏந்திய தூய கரங்களைத்
தொட்டுப் பார்க்கத் துடிக்கிறேன் மைந்தா ?
சவமாக நானும் சரிவதன் முன்னர்
சந்தர்ப்பம் ஒன்று தந்திடுவாயா ?

ஆணைகள் பிறப்பிக்கும் அழகிய வாயை
நான் ஆசையோடு பார்த்திட வேண்டும்
துணையொத்த உன் தோள்கண்ட பின்னரே
துவழும் என்னுயிர் உடலினைத் தாண்டும்

வீரம் பொங்குமுன் விழிகளின் அசைவை
விருப்பத்தோடு நான் பார்த்தபின் பின்னரே
பாரம் பூமிக்காய் இருந்திடும் என்னுடல்
பற்றும் தீயினில் சங்கமமாகும்

நேராய் நிமிர்ந்து நிற்குமுன் நெஞ்சினை
நேயத்தோடு என்கரம் தொட்டு
ஆரா அன்புடன் வருடிய பின்னரென்
ஆவி பிரியட்டும் அகிலத்தை விட்டு

அன்று ஓர் அரங்கிலே அன்புடன் காட்சிநீ
அளித்துரை யாற்றிட அனைவரும் மகிழ்ந்தனர்
என்று நான் அறிந்ததும் ஏங்கியே அழுததை
எவ்விதம் கூறுவேன் கொஞ்சமா வேதனை ?

மேடையில் நீயும் தோன்றுவாய் என்று
மேதினந் தன்றுநான் மெல்ல நடந்து தள்
ளாடிய வண்ணமே ஊர்வலந் தன்னில்
ஆவலாய் வந்தனன் அடைந்த தேமாற்றமே

கவிதையொன் றெழுதவோ கற்பனை காட்டவோ
கருதிநான் இவையெல்லாம் எழுதிடவில்லையுன்
செவிகளில் என்குரல் கேட்டெனை அழைத்திடு
சீக்கிரம் முகத்தைஇத் தாய்க்குக் காட்டிடு.

— கலைமணி

"நமது தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கட்கு கரவெட்டியைச் சேர்ந்த அறுபது வயது மூதாட்டி ஒருவர் தன் ஆவலைச் சொல்லி எழுதி அனுப்பிய கவிதை இங்கு பிரசுரமாகியுள்ளது."

www.tamilarangam.net



# பெல்ஜியம் பிரிவினையை நோக்கி...




வளவன்

மேற்கு ஐரோப்பாவில் அனைத்துலக அரசியலில் மிக நுட்பம் வாய்ந்த நாடான பெல்ஜியத்தில் பிரிவினையும், தனிநாட்டுக் கோரிக்கையும் வளர்ந்து வருகின்றது. மேற்குலகில் பெல்ஜியத்தின் முக்கியத்துவம், அங்கு வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பின் தலைமையகம் இருப்பதால் அதிகரித்திருப்பது அனைவரும் அறிந்ததே. வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பானது, மேற்கு நாடுகளின் பாதுகாப்பு, இராணுவக் கூட்டமைப்பு ஆகும். இக்கூட்டமைப்பிற்கு அமெரிக்கா "முடிசூடா" தலைவனாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. பெல்ஜியம் மேற்கைரோப்பாவின் வட பகுதியில், பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து ஆகியவற்றிற்கிடையிலுள்ள நாடாகும்.

பெல்ஜியத்தில் இரு இன, மொழி பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். வலூன்ஸ் (Walloons) என்று அழைக்கப்படும் பிரெஞ்சு பேசும் மக்கள் நாட்டின் தென், மேற்குப் பகுதிகளிலும், டச்சு மொழி பேசும் பிலமிங்ஸ் (Flemings) என்ற மக்கள் வடக்கு, வடகிழக்கு பகுதியிலும் வாழ்கின்றனர். வலூன்ஸ் இன மக்கள் 32,50,000 (முப்பத்திரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம்) ஆகவும், பிலமிங்ஸ் 57,60,000 (ஐம்பத்தியேழு இலட்சத்து அறுபதினாயிரம்) ஆகவும் குடிபரம்பி உள்ளனர்.

இவ்விரு மக்களிடையில் மொழி வேறுபாடு, உள்ள போதிலும், இன, கலாச்சார வேறுபாட்டு அம்சங்கள் குறைவாகவே உள்ளன. ஆயினும், பொருளாதார ஏற்றத்தாழ்வு மிக முக்கிய முரண்பாட்டு அம்சமாக விளங்குகின்றது. உற்பத்தியிலும், பொருளாதார வளர்ச்சியிலும், வருமானத்திலும் பிலெமிஷ் (Flemish) மக்கள் ஏற்றம் உடையவர்களாக உள்ளனர். உதாரணத்திற்கு மொத்த உள்ளூர் உற்பத்தி, பிலெமிஷ் மக்களுக்கும், வலூன்ஸ் மக்களுக்குமிடையில் 10:8 என்ற விகிதத்தில் உள்ளது. இவ்வேறுபாட்டையே பெரிய காரணமாக வைத்து, ஒவ்வொரு பிலெமிஷ் குடிமகனும், வலூன்ஸ் குடிமகனுக்காகவும் சேர்த்து கூடுதலாக உழைக்க வேண்டி உள்ளதாக கருத்துக் கூறுவோர் உண்டு. புறக்கணிப்பு, அடக்குமுறை, இனப்படுகொலை என்ற பெரும் காரணங்கள் இல்லாமலே சிறிய ஏற்றத் தாழ்வுகளுக்காக பிரிந்து போக முற்படும் இம்மக்களின் விருப்புகளோடு, எங்கள் பிரச்சனையை ஒப்பிட்டால், மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசமாகத் தெரியும். இச்சிறிய காரணங்களைக் கூட அங்கீகரிக்கும் சர்வதேச சமூகம், எமது பிரச்சினையை கண்டும் காணாதவாறு இருப்பது இரட்டை வேடத்தனமாகவே படுகின்றது.

மேலும், செக்கோஸ்லாவாக்கிய நாட்டில் ஏற்படும் பிரிவினையானது, பிலெமிஷ் மக்களுக்கு உற்சாகம் தருவதாக உள்ளது. எனவே, பிலெமிஷ் பிரிவினைவாதிகள், மற்ற மக்களைப் பார்த்துக் கூறுகிறார்கள், "வலூன் நண்பர்களே! நாங்கள் 160 ஆண்டு காலமாகச் சந்தோஷத்தை அனுபவிக்காமல் இணைந்து வாழ்ந்து விட்டோம். எனவே மண முறிவு செய்து கொள்வோம்; பிரிந்து வாழ்ந்து பார்ப்போம்." என்று கூறுகின்றார்கள். எங்களுடைய பிரச்சனையில், பெரும் எண்ணிக்கை வாய்ந்த சிங்களத் தேசிய இனம், சிறிய எண்ணிக்கை வாய்ந்த தமிழினத்தில் பெரும்பாலும் தங்கியுள்ளதாகவும், தனித்து வாழ முடியாத நிலையிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது. அது தனது நலனின் பொருட்டு இணைத்து வைப்பதற்கு அடக்குமுறையைக் கையாள்வதும் கண்கூடு.

பெல்ஜியத்தில் நடைமுறையிலுள்ள சமஷ்டி ஆட்சிமுறை, பிரிவினையைத் தடுக்கக் கூடிய தொன்றல்ல என்பதே பெரும்பான்மையோரது கருத்தாக உள்ளது.

www.tamilarangam.net



டச்சு மொழி பேசுவோர், பிரெஞ்சு மொழி பேசுவோர் ஆகியோருக்காக புறம்பான இராணுவப் பிரிவுகளைக் கொண்டதாகவும் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டதாகவும் சமஷ்டி ஆட்சி முறை நிலவிய போதும், அங்கு அவ்விரு மக்களிடையில் எழுந்த முரண்பாட்டை நீக்க முடியவில்லை. எனவே புதிய ஆட்சி முறை ஒன்றை நிறுவி, பூரண சுதந்திரத்தை, பிரிவினையை தடுத்து நிறுத்த முயற்சிகள் இடம்பெறுகின்றன. இம்முயற்சியில், தற்போது ஆட்சியில் இருக்கும் கூட்டரசாங்கம் இறங்கியுள்ளது. இக்கூட்டரசாங்கத்தில் வலூன் பகுதியின் சோசலிஷக் கட்சியும், பிலெமிங் பகுதியின் சோஷல் கிறிஸ்ரியன் கட்சியும் அங்கம் வகிக்கின்றன. இவர்கள் இருவரும் வரைந்த திட்டத்தின் பிரகாரம் இரு பகுதிகளும் தமக்கென சொந்தமான நாடாளுமன்றத்தையும், அரசாங்கத்தையும் கொண்டிருக்கும். இரு பகுதிகளும் ஏறக்குறைய முழுமையான சட்டவாக்க அதிகாரங்களை மட்டுமல்ல நிர்வாக அதிகாரங்களையும் புறம்பு புறம்பாக கொண்டிருக்கும். விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம் ஆகியவற்றில் பூரண அதிகாரத்தை சமஷ்டிப் பிரிவுகள் கொண்டிருக்கும். முக்கியமான முரண்பாட்டுக் காரணங்களாக விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம் ஆகியவை இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. பெல்ஜியத்தில் இரு மக்களிடையில் உள்ள முரண்பாட்டையும், பிரிவினை கோரிக்கையையும் உற்று நோக்கினால், அங்கு உள்ள தேசிய இனமான பிலெமிஷ் மக்கள், தாங்கள் தனியாக வளர்ச்சி அடையவும், முன்னேற்றம் காணவும் விரும்பும் போக்கை அவதானிக்கலாம். அவ்வாறு பிலெமிஷ் மக்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் பட்சத்தில், தாங்கள் பிரான்ஸ் நாட்டோடு இணைந்து தங்கள் முன்னேற்றத்தை உறுதி செய்ய பிரெஞ்சு மொழி பேசும் மக்கள் விரும்புவதையும் காணலாம். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், ஒவ்வொரு தேசிய இனமும், தனது வளர்ச்சி கருதி தான் இணைந்து வாழ்வதா, பிரிந்து வாழ்வதா என்பதை தானே தீர்மானிக்கிறது.

# 'தமிழீழம் அமைவது உறுதி'

## உலக புவியியல் அறிஞர்களின் கணிப்பு

ஐக்கிய அமெரிக்க நாட்டின், வெளிவிவகாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட புவியியல் அறிஞர்களைக் கொண்ட குழுவானது, இந் நூற்றாண்டின் முடிவில் உலகம் எவ்வாறு இருக்கும் என ஆராய்ந்து தமது முடிவுகளை வெளியிட்டுள்ளது. அப்போது தமிழீழம் என்றொரு நாடு உருவாகியிருக்கும் என்பதே அவர்களது கருத்தாக உள்ளது. தற்போது 190 நாடுகள் உலகில் உள்ளன. ஆனால் இன்னும் 25, 30 ஆண்டுகளில் 300 நாடுகள் உருவாகியிருக்கும் என்பதே அவர்களது கணிப்பாக உள்ளது. அப்புவியியல் அறிஞர் குழுவின் தலைவராகிய வில்லியம் வூட் குறிப்பிடுகையில், 'நாடுகள் பல்கிப் பெருகும் விடயத்தை நாம் கையாள்வதாக தெரிவித்தார். கடந்த 20 மாதங்களில் 22 நாடுகள் ஐ. நா சபையில் அங்கத்தவராகச் சேர்ந்துள்ளதை அக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இவ் அறிஞர்களின் கருத்துப்படி, பல்வேறுகாரணிகள் இந்நாடுகளின் பெருக்கத்திற்கு காரணங்களாய் அமைகின்றன. ஜனநாயகத்தின் பரவல், சனத்தொகை அதிகரிப்பு, தொழில் நுட்பத் தொலைத் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி, அரசியல் ரீதியாக அந்நியப்படுதல் ஆகியவை பிரதான காரணங்களாக அமைகின்றன. ஜனநாயக விழுமியங்களின் பரவல் தாம் சுதந்திரமாய் இருக்கவேண்டும் என்ற உணர்வை மக்கள் மனதில் தோற்றுவிக்கின்றது. தொலைத் தொடர்பு, தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவை உலக நாடுகளின் வளர்ச்சியைப் பறைசாற்றி, தாமும் அவ்வாறு வளர வேண்டும் என்ற உத்வேகத்தை கொடுக்கிறது. தம்மோடு சேர்த்து அடையாளம் காணமுடியாத இன்னொரு மக்களால் தமது வாழ்வு நிர்ணயிக்கப்பட்டு, ஆளப்படுவதான தாழ்வு மனப்பான்மை அரசியல் அந்நியத்தை ஏற்படுத்தி விடுதலையை தூண்டிவிடுகிறது.

தற்போது உள்ள நாட்டு எல்லைகளின் முக்கியத்துவம் நீங்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள். முன்னரே வரையறுக்கப்பட்ட எல்லைகளை விட ஒரு மொழி பேசும் மக்கள் தாம் வாழும் நிலப்பரப்போடு கொள்ளும் உறவு இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துவிடுகின்றது. உலகில் தற்போது தன்னுரிமைக்கான (Right to self-determination) கோரிக்கை முன்னுரிமை பெற்றுவிடுவதாகவும், அதனைத் தடைசெய்ய முடியாது எனவும் ஒத்துக் கொள்கின்றனர் புவியியல் அறிஞர் குழுவைச் சேர்ந்தோர் இவர்களது கருத்துப்படி, மேற்கைரோப்பாவில் பெரும் மாற்றங்கள் நிகழவுள்ளன. ஆசியாவில் ஆப்கானிஸ்தான் மூன்றாகப் பிரிந்து விடும். பிலிப்பைன்ஸ் நாட்டில், மின்டானோ பகுதியில் முஸ்லீம்கள் தனிநாடு அமைத்து விடுவர். இந்தியா, காஸ்மீரின் ஒரு பகுதியையும், பஞ்சாப்பையும் இழந்து விடும். சீனாவிலிருந்து திபெத் பிரிந்து தனி நாடாகிவிடும். தென்னாபிரிக்கா, அஸானியா, சூலுலாந்து, என்றவாறு மூன்று நாடுகளாகிவிடும். எரித்திரியா, திக்ரே போன்ற நாடுகள் எத்தியோப்பியாவில் உருவாவதோடு, சுடான், சையீர் ஆகியவை இரண்டு நாடுகளாகிவிடும். இலங்கையில் தமிழர் தாயகம் உருவாகிவிடும். இத்தாலிய புவியியல் அறிஞர் ஈவா இதனைக் குறிப்பிடும் போது "இப்போக்கைத் தடுத்து நிறுத்த முடியாது. தற்போதய அரசியல் போக்கானது, ஓர் அரசுக்குள், வேறு அரசுகள் தோன்றும் தன்மையையே கொண்டுள்ளது. ஐ. நா. சபையில் புதிய நாடுகளின் எண்ணிக்கை வளர்வதை எவராலும் தடுக்க முடியாது. ஆனால் நீண்ட காலப் போக்கில் பொருளாதார ரீதியாக , தொழில் நுட்ப ரீதியாக, மக்கள் ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கும் நிலையானது , பல்வேறு நாடுகளிடையே கூட்டுறவை வளர்ப்பதாகவே இருக்கும்" என்று நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப் போட்டி இல. 3

இங்கே வெட்டவும்




பெயர்: ------------------------------------

முகவரி: ------------------------------------

------------------------------------

## இடமிருந்து வலம்

1. 1983 ஆம் ஆண்டு யூலை மாதம் சிங்கள இராணுவத்தினரை உள்ளடக்கிய FOUR FOUR BRAVO என்ற இரா்னுவ அணியை அழித்து வீரமரணமடைந்த ஓர் மாவீரன் ?
2. கடற்புலிகளினால் கைப்பற்றப்பட்ட அதிவேக விசைப்படகு ?
3. ராஜீவின் நம்பிக்கைத் துரோகத்தினால் பலாலி இராணுவ முகாமில் சயனைட் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட தளபதிகளில் ஒருவர் ?
4. 1982 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் ஓர் பொலிஸ் நிலையம் முற்றாக அழிக்கப்பட்டு ஆயுதக்களஞ்சியம் கைப்பற்றப்பட்டது, அது அமைந்திருந்த இடம் ?
5. ஆபிரிக்கக் கறுப்பினத்தவரின் விடுதலைக்காக சுமார் 30 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த தலைவர் ?
7. அண்மையில் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட விமானம் தமிழ் மக்களால் இப்படி அழைக்கப்பட்டது ?
8. தற்போது உலக அரங்கின் கவனத்தை ஈர்த்துள்ள சோமாலியா நாடு..... எதிர்நோக்கியுள்ளது.
10. தமிழகத்தில் அண்மையில் தமிழீழ விடுதலையை ஆதரித்து ஊர்வலம் நடத்திய ஓர் மக்கள் கட்சி ? (வலமிருந்து இடம்)

## மேலிருந்து கீழ்

4. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது கெரில்லாத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய மாவீரர் ?
5. கடலும் கடல் சார்ந்த இடமும் ? (கீழிருந்து மேல்)
6. பரந்துபட்டு வாழும் தமிழ்மக்களாகிய நாங்கள் எல்லா நாடுகளிலுமுள்ள மக்களுடன் நெருங்கிய ......... உறவை வைத்துக் கொள்ள வேண்டும். (கீழிருந்து மேல்)
9. மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி சுபன் இம் முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்தார். (கீழிருந்து மேல்)
11. திலீபனின் தீர்க்கதரிசனம் அவன் வீரமரணமடைந்து 3 ஆம் ஆண்டில் இங்கே நிறைவேற்றப்பட்டது. (கீழிருந்து மேல்)

### நிபந்தனைகள்:

1. விடைகள் வந்துசேர வேண்டிய கடைசித் திகதி 25. 11. 1992
2. ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

## மனம் வருந்துகிறோம்

எமது ஐப்பசி, 1992 இதழில் வெளியாகியிருந்த இரண்டாவது குறுக்கெழுத்துப்போட்டியில், மேலிருந்து கீழ் வரவேண்டிய 8வது இலக்கமிட்ட வினா தவறுதலாக இடமிருந்து வலம் பகுதிக்குள் பிரசுரிக்கப்பட்ட தவறுக்கு வருந்துகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# அக்கறைப்பூக்கள்

அன்புடன் எரிமலை ஆசிரியருக்கு!

இம்முறையும் எரிமலை தரத்தில் உயர்ந்து நிற்கிறது. தியாகி திலீபனின் காலடிச் சுவடுகளைக் காணும் போது கண்கள் பனிக்கின்றன. ஆழ வேரோடிய ஆலமரமும் அசைக்க நினைத்த புயல்களும் யோகி அவர்களின் கட்டுரையில் இந்திய சிங்கள ஆட்சியாளர்களின் பேச்சு வார்த்தை நாடகங்களுள் இருந்த சூழ்ச்சிகளும், விடுதலைப்புலிகளின் வேகமும் வெற்றியின் உறுதியும் தெளிவாகத் தெரிகின்றது. தாய் மண்ணைக் கண் முன் நிறுத்தும் வண்ணப் படங்கள். கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட அதிவேக விசைப் படகு நடுப்பக்க வண்ணப்படம் என தமிழ் ஈழத்தின் யதார்த்த நிகழ்வுகளை கற்பனையில் காணச் செய்துவிட்டீர்கள்.

விசக் கடிக்கும் விஷ முறிவுக்கும் விஷமே மருந்தாக அமைந்ததுண்டு. அதுபோல் போர் வெறிக்கும் விடுதலைப் போர்தான் முறிவு மருந்து என விடுதலைப் போரின் அவசியத்தை "போரும் அதன் சமூகப் பயன்பாடும்" அழுத்தமாக சொல்கிறது. கைவிடப்பட்ட கண் கலங்கச் செய்த சோமாலியா போல் நாளைய தமிழீழமும் மாறிவிடாது தடுத்திட விடுதலைப் புலிகளின் தலைமை கிடைத்ததே தமிழினத்தின் அதிர்ஸ்டம்.

க. அரியநாயகம், ஜேர்மனி.

மதிப்பிற்குரிய எரிமலை ஆசிரியர்க்கு!

நேற்று தமிழீழத்தின் குரலாக உள்ள ஆக்கங்கள் இன்று தமிழ் தேசியத்தின் குரலாகி நாளை சர்வதேச தமிழ் சமூகத்தின் குமுறலாகி வெடிக்கச் செய்ய எரிமலையில் ஆக்கங்கள் தொடர்ந்து வெளிவரவேண்டும்.

சர்வதேச தமிழர்களை ஒன்றிணைக்க 'எரிமலை' குமுற வேண்டும். குமுறும் எரிமலை நெருப்பைக் கக்க வேண்டும். அன்றுதான் உலகத் தமிழர்கள் ஒன்றுசேரும் நாளாகவும், சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் இனமாகவும் தமிழன் வாழமுடியும். அந்த நாளை விரைவுபடுத்துவீர்கள் என நம்புகின்றேன்.

ஆதித்தன், தமிழ் நாடு.

அன்புடன் 'எரிமலை' ஆசிரியர் குழுவுக்கு!

மேலும் 'எரிமலை' இதழானது தாயகத்தில் நடக்கும் உண்மை நிகழ்வுகளை வெளிநாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு அறிய உதவுவதோடு, நல்ல கருத் தோட்டமாயும் இருப்பதையிட்டு நான் 'எரிமலை இதழை பாராட்டுகிறேன்.

உரும்பையூரான் மாயவன், ஜேர்மனி.

எரிமலை ஆசிரியருக்கு,

எமது தாய்மண் வெளியீடான எரிமலையே உனது ஐப்பசி ஏடு பார்த்தேன். அட்டைப்பட இளைஞனின் பார்வை மிக அண்மையில் தமிழீழம் தெரிவதுபோல் உள்ளது. மேலும் மேஜர் கிண்ணியப்பா எழுதிய சில நிகழ்வுகள் எமது போராட்டத்தின் கஸ்ரதுன்பங்களை எடுத்துக் காட்டியது மிகவும் வரவேற்கப்பட்டதொன்றாகும். குறிப்பாக ஐப்பசி இதழ் நன்றாக இருந்தது.

மதி, பாரீஸ்.

அன்பான எரிமலை குழு ஆசிரியர்களுக்கு,

எரிமலை, மாதாந்தம் படிக்கும் ஒரு தமிழீழ மகனில் நானும் ஒருவன். தங்களின் எரிமலையில், தமிழீழத்தில் தற்போது நடைபெறும் பொருளாதார திட்டங்கள் பற்றி தாங்கள் எஎழுதுவது குறைவாக உள்ளது. ஏனெனில் இங்குள்ள மக்கள் இன்றைய தமிழீழ பொருளாதாரத் திட்டங்கள் பற்றி அறிய எரிமலை ஒன்றே சிறந்த வழியாகும். எனவே தமிழீழ பொருளாதாரம் பற்றியும் எழுதுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சிவா, பாரிஸ்.

எரிமலை ஆசிரியர் குழுவினர்க்கு!

ஐயா உங்கள் பத்திரிகையை தொடர்ந்து வாசித்துவரும் வசகர்களில் நானும் ஒருவன். தங்கள் எரிமலையில் பல சிறந்த அரசியல் கட்டுரைகளும், கவிதைகளும், கதைகளும் தொடர்ந்து வருகின்றன. கடந்த இரண்டு எரிமலைகளில் வெளிவந்த இலட்சியத்திற்காக மரணித்த மாமனிதர்களின் இதயம் எவ்வளவு மென்மையானது என்பதை அக்கட்டுரைகள் கவிதைகள் எடுத்துக் காட்டுகின்றன.

ந. சிறிபாலன், பாரிஸ்.

எரிமலை ஆசிரியருக்கு!

எரிமலையின் அட்டைப்படம் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. அந்த விடுதலை வீரனின் பார்வையின் தீட்யண்யத்தை நாம் உணரக் கூடியதாக இருக்கிறது. கொள்கை வீரன் திலீபனின் படங்கள், கட்டுரைகள் கண்ணில் நீர் மல்க வைத்தன. பழைய நினைவுகளைக் கிளற வைத்ததோடு இதைப் போன்ற கட்டுரைகள் ஒவ்வொரு மாவீரரைப் பற்றியும் எழுதினால் நன்றாக இருக்கும். யோகியின் பேச்சை நான் நாட்டில் நின்றபோது கேட்டிருக்கிறேன். அப்போது இன்னும் நிறையப் பேசமாட்டாரா என்று ஆசைப்பட்டதுண்டு. அதே போன்று அவரது கட்டுரையும் அப்படியே இருந்தது. சுதந்திரப் பறவைகள் கவிதையில் வரும் ஆங்கிலப் பதத்தை ஆயுதங்களின் பெயராக இருந்தாலும் அதைத் தமிழில் எழுதியிருக்கலாம். போர்க்காலங்களில் வறுமை, இருப்பிட வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை இன்னோரன்ன பல காரணங்களால் மக்கள் நெறி தவறிப் போக சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தமிழீழத்தில் மகோன்னத வழிநடத்திலிலும், கட்டுப்பாட்டிலும் சரித்திர வழக்கு உடைத்து எறியப்படுகிறது. "போரும் அதன் சமூகப் பயன்பாடும்" என்ற கட்டுரையின் வாயிலாக உணரக் கூடியதாக இருந்தது.

சிறிதரன். பாரிஸ்.

www.tamilarangam.net



# ஓவியர் அ. இராசையா

ஈழத்தின் ஓவியக்கலைக்கு முன்னோடிகளாக இருந்த எஸ். ஆர். கனகசபையினால் ஓவியத்துறைக்கு ஈர்க்கப்பட்டவரே இராசையா. வின்ஸர் ஆர்ட் கிளப் பின் ஆயுள்காலம் முழுவதும் அதனுடன் தொடர்பு கொண்டியங்கிய இவர் அவ்வோவியப் பயிற்சியகத்தின் முதன் மாணாக்கரில் ஒருவர். இராசையாவின் கலைப் பெறுமானமுள்ள ஓவியப் படைப்புக்கள் வின்ஸர் ஆர்ட் கிளப் காலத்திலிருந்து, அவர் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராயிருந்த காலப்பகுதிக்குரியன வாகும். யாழ்ப்பாணத்தவர்க்கு அவர்களின் கிராமிய வாழ்வின் வளத்தை மீள் கண்டு பிடிப்பு செய்து கொடுப்பதாக இவரது ஓவியங்கள் காணப்படுகின்றன.

நொந்து தளர்ந்து குனிந்து வளைந்து
நொடிந்த சரு(கு) அதன் முன்
வெந்து புழுங்கித் துவண்டும் விடியலை
வேண்டி நிற்கும் குருத்து!



பிரதிமை, நிலைப்பொருள், இயற்கைக்காட்சி என ஓவியத்தின் முப்பிரிவுகளிலும் தன் கலையாழுமையை இராசையா வெளிப்படுத்தியவர். வர்ணத் தெரிவும், ஆக்க அமைவும் இவரது ஓவியங்களின் சிறப்பியல்பு. நிலக்காட்சி ஓவியங்களில் தனிச்சிறப்பான ஆளுமை பெற்ற இராசையாவின் ஓவியங்கள் கலைப்படைப்பு என்ற விழுமியத்தை மட்டுமே கொண்டிருக்கவில்லை. அவை வரலாற்றுப் பதிவுகளாகவும், ஈழத்து சைவ பண்பாட்டின் வெளிப்பாடுகளாகவும் விளங்குகின்றன.

ஞாபகத்திலிருந்தே ஓவியம் வரைதல் வேண்டும் என்பது இவரது அபிப்பிராயம். நேரில் பார்த்து வரையும்போது கலையாக்கம் குன்றிவிடுகின்றது, ஓவியனின் கற்பனைக்கு இடமில்லாது போய்விடுகின்றது. ஓவியத்தை ஒழுங்குபடுத்திக் கீறவும், ஆக்க அமைவிற்கும் ஞாபகம் மிகவும் வசதியானதென்பது இராசையாவின் கருத்து. இலட்சிய வகை மாதிரியான இவரது ஓவியங்கள் நிரந்தரமான காட்சிக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

இராசையா அரசியற் பிரக்ஞை உடையவராகவும், சிறந்த ஓவியப்பயிற்சியுடையவராகவும் இருந்ததுடன், எல்லா வகையான கலையாக்கங்களையும் புரிந்துகொண்டு இரசிப்பதுடன் கலையை ஊடகமாகக் கொண்டு கல்வி பயிற்றுதலில் நிறைந்த அறிவுடையவராக இருந்தார்.

கலைஞர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவப்படுத்த வேண்டும் என்பதற்கிணங்க இவரது ஓவியங்களின் காட்சியொன்றினை ஏற்பாடு செய்ய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை நடவடிக்கை எடுத்திருந்தது. துரதிஸ்டவசமாக அவ்வெண்ணம் இன்றுவரை நிறைவேறாது போய்விட்டது. திரு. அம்பலவாணர் இராசையா அமரராகிவிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## செஞ்சோலை இசை நிகழ்ச்சி




தமிழீழ மீட்புப் போரில் பெற்றோரை இழந்து நிர்க்கதியான சிறார்களை செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு நிலையம் அன்புடன், அரவணைத்து காத்து நிற்கிறது. இச் செஞ்சோலை வளர்ச்சி நிதிக்காக இசைமாலை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது. செஞ்சோலையின் பொறுப்பாளராக செல்வி ஜனனி இருக்கிறார். செஞ்சோலையில் மூன்று வயது தொடக்கம் 14 வயது வரை 78 சிறுமிகள் பராமரிக்கப்படுகிறார்கள். இச் செஞ்சோலை இசை நிகழ்ச்சியில் கவிஞர் நாவண்ணன், கவிஞர் பொன். கணேசமூர்த்தி, செல்வி. ஜெயா, கவிஞர் வாஞ்சிநாதன் ஆகியோர் எழுதிய பாடல்களும் நிகழ்ச்சியின் போது பாடப்பட்டன.

## கோதுமைக்கு மாற்றீடாக...

கோதுமைக்கு மாற்றீடாக பயன்படுத்தக் கூடியது கம்புத் தானியம். இது போசாக்கு மிகுந்தது. இதில் புரதம், கொழுப்பு, கனிப் பொருட்கள் இருக்கின்றன. வளம் குறைந்த மண்ணில், குறைந்த நீர்ப்பாசன வசதியுடன் செய்கை பண்ணக் கூடிய, வரட்சியைத் தாங்க வல்லதான இக் கம்புப் பயிர் 80 நாட்களில் அறுவடை செய்யக்கூடிய குறு காலப் பயிராகும். இக் கம்புத் தானியத்திலிருந்து பிட்டு, லட்டு, பிஸ்கட் போன்ற சுவையான சிற்றுண்டி வகைகளையும் தயாரிக்க முடியும். இத்துடன் கஞ்சி போன்றவற்றையும் தயாரிக்கலாம்.

மேலும் கம்புப் பயிர் அறுவடையின் பின்னர் மிஞ்சும் தண்டுக் கழிவுகள் கால்நடைக்குச் சிறந்த தீவினமாகும். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், வெளிநாட்டிலிருந்து தமிழீழத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வரட்சியைத் தாங்கக்கூடியதான இக்கம்புப் பயிரை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இதன் மூலம், கோதுமை நுகர்வுக்கான வெளிச் செல்லும் 576. 3 மில்லியன் ரூபாயை, உள்ளூரில் பயிர் செய்யக்கூடிய சிறு தானியங்களை எமது உணவுப் பழக்கத்தில் சேர்ப்பதன் மூலம் வெளியே செல்லும் பணத்தினை தமிழீழத்திலே தக்க வைக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஈரப்பதன்

இந்த மண்
காலின் கீழ் உள்ள
வெறும் தூசிப் படலம் அல்ல
புரட்டிப் புரட்டி உழுதாலும்
உணர்வார்ந்த பிடிப்பில்
துணிக்கைகளாய் தூர்ந்து போகாத
உயிர்த்தளம்



வேலியடைப்புக்குள்ளும்
[illegible]களிற்குள்ளும் இது இல்லை
[illegible]
[illegible] பெற்றனே
[illegible]
[illegible]த்திரமாய் [illegible]
வாழ்விற்[illegible]

என்து ஈரலிப்பையெல்லாம்
உயிர்சூட்[illegible] ஆவி [illegible]யிர்த்து
மேற்காவ[illegible]யாய் பொழிந்து
வள்ளண்மை ஓயாத வளம் பெருக்கும்
வாழ்வெனக்காகுக

மண்ணில் இருந்து விண்ணுக்கும்
விண்ணிலிருந்து மண்ணுக்குமான
இன்னுயிர் இணையமென
மறுபடியும் மறுபடியும் வருவேனாக
பத்திரமாக
வாழ்வில் நாம் பேணும் ஈரப்பதன்தான்
மண்ணின் குருதிச் சூட்டை தக்க வைத்திருக்கும்
ஒவ்வோர் உயிர் முளைக்கும்
இந்த ஈரப்பதனே காப்பு

ஈசா
எனக்கோர் வரம் அருள்
என் சிந்தைச் சுயம்புலத்தில்
ஈரப்பதனும் உயிர்சூடும்
எப்போதும் சுவறியிருப்பதாக

— சு. வில்வரத்தினம் —



www.tamilarangam.net

www.tamilarangam.net





# ஆனையிறவு ஆழப்பதிந்ததொரு காலச்சுவடு

ஆழப் பதிந்து விட்டதொரு காலச்சுவடு - ஆனையிறவுப் போர் - விடுதலைப் போராட்டத்தில் பெரும் தடயமாகிவிட்ட நிகழ்வு. எல்லோருடைய நினைவுகளிலும் உப்பளமாகவே இதுவரை காலமும் இருந்த இடம், இன்று யுத்தகளமாக மாறிவிட்டது. அந்தப் பிரதேசம் எங்கும் விமானங்கள் வீசிய குண்டுகளினாலும், பீரங்கி எறிகணைகளினாலும் நிலம் அதிர்ந்து கொண்டேயிருக்கிறது.

இடைவிடாத துப்பாக்கிச்சமர் ஓயவில்லை (முகாம் தகர்த்தெறியப்படும் வரை ஓயப்போவதில்லை) கந்தக வெடியின் புகைப் படலம் கண்மணியை எரிக்கிறது. குண்டும் குழியும் ஆகிவிட்ட நிலம், வெடிமருந்தில் கொதித்துக் கொண்டிருக்கிறது. சிங்கள ஆதிக்கத்தைத் தகர்த்தெறியும் படைமுகாம் அழிப்புப் போரில் சிந்தப்பட்ட வேங்கைகளின் குருதியின் ஈரம் தாயக மீட்பிற்காகப் போராடும் போராளிகளின் உணர்விலே புதிய விதைகளை விதைக்கிறது. இவை தமிழ் மக்களின் மனங்களில் மேலும் நம்பிக்கை ஊட்டியுள்ளது.



யாழ்ப்பாணக் குடாநாட்டின் வாசற்படியின் முன் மலையாக நிற்கிறது ஆனையிறவு இராணுவமுகாம். தமிழீழத்தின் ஏனைய நிலப் பிரதேசங்களையும் யாழ்ப்பாணக்குடாநாட்டையும் இணைக்கும் வழியில் இந்தத் தடை நம் எல்லோருடைய தொண்டைக் குழியிலும் நெருடிக் கொண்டிருக்கும் முள்ளாக உள்ளது.

இந்த இராணுவமுகாம் பரந்த வெளியில், அதிகமான பகுதி கடனீரேரி சூழ அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனையிறவுக் கடனீரேரி, தமிழீழத்திற்கு இரண்டு வளங்களை வழங்கும் சிறப்புடையது. பரந்து நீண்டிருக்கும் கடனீரேரியில், சூரியன் உதிக்கும் திசையில் பருவகால மீன்பிடி நடக்கும், சூரியன் மறையும் திசையில் உப்பு உற்பத்தி நிகழும். கீழ்த் திசையில் மாரி காலத்தில் ஆழ்கடலில் தொடும்வரை நீர் நிறைந்து அலை மோதும். மாரியிலிருந்து கோடை காலத்தின் நடுப்பகுதிவரை இந் நீர்ப்புலத்தில் இறால், மீன்பிடித்தொழில் நிகழும். அந்நாட்களில் வண்ணாங்குளத்திலிருந்து, சுண்டிக்குளம் வரை தொழில் செய்வோர் தங்குமிடங்களில் மின்னும் வெளிச்சப் புள்ளிகள் தூர இருந்து நோக்கும் போது எழில் மிகுந்த நகராகத் தோன்றும் அழகே அழகு.

சீதோஷ்ண சூழலைத் தேடி இடம் பெயர்ந்து வரும் சைபீரியப் பறவைகள் இந் நீர்ப்பரப்பை அண்டிய பிரதேசங்களில் கூட்டமாய் வந்தமரும். இந்தப் பறவைகளின் அணிவகுப்பும், இவற்றின் இசை ஒலியும் கடனீரேரியின் அமைவும் மனதில் இதத்தை ஊட்டும். இசைக்கும் பறவைகள் (Humming Birds) என அழைக்கப்படும். இந்தப் பறவைகளை யாழ்ப்பாணத்தார் தமக்கேயுரித்தான தனித்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வமான மொழி நடையில் 'கூழைக் கிடா' என அழைப்பர்.

கடனீரேரியின் மேல் திசையில், குறிஞ்சாத்தீவு, ஆனையிறவு உப்பளங்கள், உப்பு மலைகளை உவந்து கொண்டேயிருக்கும். தமிழீழத்தின் உப்புத் தேவையை நிறைவு செய்யும் திறன் மிக்கவை இவை இரண்டும். வெள்ளிப்பளிங்கு மலைகளாக நீண்டிருக்கும் உப்புக்குவியல்கள். ஒழுங்கமைந்த சதுரக் கோடுகளாய் பார்வையில் பரந்திருக்கும் உப்புவயல்கள், அணைக்கட்டுகளில் அமைதியாக இருந்து ஒரு அத்திவாரத்தை இரகசியமாக உருவாக்குவது போல திண்மமடையும் உப்புக்குளங்கள். கோடை வெய்யில் கொதிக்க கொதிக்க உவர் நீர் ஓடி வரண்டு விழையும் உப்புவயல். நீர் வற்றும் போது பரவும் உப்புச் சேற்றின் மணமும் ஒருவகை இதம்தான்.

கூழைக்கிடாக்கள் குடிவந்திருக்கும் கடனீரேரி. கோடைகால நடுப்பகுதியில் வற்றிவர வன்னிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான நடைபாதை, இயக்கச்சி கண்டாவளையூடாகத் தொடங்கி விடும். (இராணுவ நெருக்கடிகள் இறுக்கமான போதிலெல்லாம் இப்பாதையிலேயே மக்களின் சுவடுகள் அதிகமாகப் பதிந்தன)

ஆனையிறவிற்குத் தெற்கே பசுமை செழித்த வன்னிநாடு -நெல் விளைந்து நிறைந்திருக்கும்; நெடிதுயர்ந்த மரங்கள் வகைவகையாய் வளர்ந்திருக்கும். மந்தைகளும் விலங்குகளும் மடைகொண்ட குளங்களும் கொண்ட நிலம். வடக்கில் செம்மண்ணில் சிறு விவசாயமும் தென்னஞ் சோலைகளும் பனங்கூடல்களுமான யாழ்குடாநாடு.

தமிழ்தேசத்தின் ஓரினமக்கள் ஒருமித்து வாழ்கையில் ஏனிந்தச் சிங்கள முகாம் இங்கு வந்தது. இந்த மக்களுக்காக எந்தத் தேவையுமில்லாமல் ஏன் இங்கு இருக்கிறது. இனத்தால் மொழியால் பண்பால் மதத்தால் வேறுபட்ட, இம்மண்ணுக்கு முற்றிலும் மாறுபட்ட அந்நிய இனவெறி இராணுவம் எங்களுடைய சொந்த மண்ணிற்குள் நின்று அழிவு செய்வது ஏன்?

சலங்கைகள் ஒலிக்கும் மாடுகள் பூட்டிய வண்டில்களில் அன்று வற்றாப்ளைக்கும், புதுாருக்கும், புளியம்பொக்கணைக்கும் போய் வந்தோமே!

மடை திறந்த வெள்ளம் போல் மடுவுக்குச் சென்று திரும்பினோம். கடற்காற்று வருடிச் செல்ல கடல் வெளியையும் உப்பு மலைகளையும் கண்டு வியந்தோமே! அருகருகே புகைவண்டியும் பிற வண்டிகளும் போட்டியிடும் மனவுணர்வில் கிறங்கிச் சென்றோம். நெல்லும் சாமி, குரக்கன், புகையிலை, வெங்காயமும் பரிமாறிக் கொண்டோம். இவை தவிர, எத்தனை தலைமுறையாக இந்த வழியினூடே-நடந்து திரிந்தோம். எங்களுடைய இராச்சியத்தின் எழில்பூத்த அக்காலத்தே யானையும் சேனையும் அணிவகுத்ததும் இந்தப் புலத்திடைதான். எத்தனை காலப் பண்பாட்டு உறவுகளைக் கொண்டிருந்தோம்.

இன்று இவை இல்லை. எதிரி வந்து இடையில் புகுந்ததால் எங்களின் உறவெல்லாம் துண்டிக்கப்பட்டது. பண்பாட்டுப் பெருவிழாக்களைப் பார்க்கமுடியாது தடுக்கப்பட்டோம். பண்டமாற்றெல்லாம் வழியடைத்ததால், வாய்க்கால் அடைத்த வெள்ளம் போலத் தேங்கிப் போயிற்று. எவ்வளவு இன்பமான கால நகர்வில் அந்தகார இருள் சூழ்ந்தது! ஆனையிறவு இராணுவம் குடாநாட்டையும் வன்னியையும் பிரிக்கும் பூதகரமானது! ஒரு பூகம்பம் வெடிக்கக் காரணமாயிற்று!

1960ம் ஆண்டுகளில் சட்டவிரோதமாக வெட்டிய மரங்கள் இடமாற்றம் செய்யப்படுவதை



வெற்றிலைக்கேணியில் இராணுவத்துடனான மரபுரீதியான யுத்தத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலி வீரர்கள்

www.tamilarangam.net



தடுக்கவே இந்தப் பகுதியில் முதன் முதலாகக் கடவை அமைக்கப்பட்டது. அப்போது பொலிசும், வனபரிபாலன இலாகாவினரும் கூட்டாகக் கடமை புரிந்தனர். பின்னர் 70 களில் தென்னிலங்கையில் நடைபெற்ற ஜே. வி. பி. கிளர்ச்சியுடன் தொடர்ந்து இது ஒரு தடைமுகாமாக செயலாற்றியது. 80 களில் எங்களுடைய தமிழீழப் போராட்டம் கூர்மையுற்றெழத் தொடங்கிய போது இம் முகாமில் தமிழ் அவலக் குரல்கள் எழுந்தன. தமிழ் இளைஞர்களின் பச்சை உடம்புகள் இரத்தக்கண்டலுடன் பழுக்க வைக்கப்பட்டன. இது விசாரணைக் களம் என்ற பெயரில் சித்திரவதைக் கூடமாக கொடூரம் புரிந்தது. இந்த முகாம் சார்ந்த பகுதிகள் இராணுவ வாடை வீசத் தொடங்கின. 80 களின் நடுப்பகுதிவரை, இந்த இராணுவ முகாமிலிருந்து வெளியேறும் சிங்களச் சிப்பாய்கள் இம் முகாமிற்குத் தெற்கேயுள்ள பரந்தனைச் சூழவுள்ள இடங்களையும், வடக்கில் இயக்கச்சி முதல் சாவகச்சேரி வரையிலான பகுதிகளையும் சுற்றி வளைத்துத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இவ்வாறான போதுதான் 83 ம் ஆண்டு முற்பகுதியில் வன்னிப் பிரதேசத்தின் முதல் கண்ணிவெடி ஒலித்தது. வன்னியெங்கும் அது பல சேதிகளைக் கூறியது. இந்த முகாமில் இருந்து பரந்தனை நோக்கிப்புறப்பட்ட இராணுவத்தின் மீது வயல் நிலமும் சிறுபுதர்க் காடும் சூழ்ந்த உமையாள்புரத்தில் விடுதலைப் புலிகளால் வன்னிப் பிரதேசத்தின் முதல் கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. கரந்தடிப்படை முறையில் மேற்கொள்ளப்பட்ட அத்தாக்குதல் இராணுவத்திற்கு உடல் ஊறுபாட்டையும், உள அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இராணுவம் வெளியேறும் சந்தர்ப்பங்களில் இரு புறத்தும் நிகழ்ந்தன. 85ன் நடுப்பகுதியில் இம்முகாமின் இருபக்கங்களிலும் போராளிகள் காவலரண்களை அமைத்தார்கள். முகாம் முற்றுகைக்குள்ளானது. -இராணுவமும் முடங்கியது. ஆனாலும் இனவெறியன் இருப்பானா சும்மா? வெறிச்சன்னதங்கொள்ளும் போதெல்லாம் சன்னங்களைப் பொழிந்தபடி, இன அழிப்பிற்காக இரத்தம் குடிப்பதற்காக முகாமை விட்டு இராணுவம் வெளியேற முற்பட்டது. இராணுவம் முகாமைவிட்டு முன்னால் காலடி வைக்க முற்பட்ட போராளிகளால் தடுத்துத் தாக்கித் திருப்பி அனுப்பப்பட்டது. எண்பத்தி ஏழில் இந்தியப்படை இங்கு வரும் வரை இந்த நிலமை நீடித்தது.

இந்திய இராணுவம் இங்குவந்த போது அவர்களும் ஆனையிறவில் முகாமிட்டிருந்தனர். சிறீலங்கா இராணுவத்தின் அக்கம் பக்கமாகவே இந்திய இராணுவத்தின் முகாமும் அமைந்தது. சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளை இந்திய இராணுவம் மேற்கொள்ளலாயிற்று. இச் செயல் தமிழீழ போராட்டத்தை ஒடுக்குவதில் இந்தியாவும் இலங்கையும் இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயற்பட்டார்கள் என்பதைச் சான்று பகருவதாகும். இலங்கை இராணுவமோ, இந்திய இராணுவமோ இப் பகுதியூடாகச் செல்லும் பயணிகளுக்குச் சோதனைச் ‘சா’ வடியாகவே இருந்து வந்தன.

இரத்தம் சிந்திய போராட்டத்தின் விளைவாக இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து தொண்ணூறில் மீண்டும் இம்முகாம் விடுதலைப் புலிகளின் கடும் முற்றுகைக்குள்ளானது. இங்கிருந்த தரைப்படை தம்மைத் தங்கவைத்துக் கொள்ள முற்று முழுதாக விமானப்படையின் முழுமையான ஒத்துழைப்பை நாடவேண்டியதாயிற்று. முற்றுகை நெருங்க, நெருங்க தரையிறங்கும் உலங்கு வானூர்திகள் புலிகளின் தாக்குதல்களுக்குப் பயந்து தயங்கத் தொடங்கின. அத்துடன் தொண்ணூறு நடுப்பகுதி தொடக்கம் இப் பகுதியூடாகச் சகல பிரயாணங்களும் முற்றாகவே தடைப்படுத்தப்பட்டன. இப்பகுதியூடாகப் பயணித்த மக்கள் இந்தத் தடைகாரணமாகப் பழக்க மற்ற சீரில்லாத பாதைகளால் பிரயாணத்தைத் தொடர வேண்டியதாயிற்று. பொருளாதாரத் தடையும் போக்குவரத்து நெருக்கடிகளும் தமிழ் மக்களை மேலும் வறுமைக் கோட்டை நோக்கிய விசையில் அமுத்தலாயிற்று. ஆனாலும் தமிழ் மக்கள் சோராது காடுகளுக்குள்ளாலும் சதுப்பு நிலங்களாலும் பயணத்தைத் தொடர்ந்தனர். ஆனால் போராளிகளின் காவல் நிலைகள் நாளும் பொழுதும் முகாமை நோக்கி நகர்ந்து கொண்டேயிருந்தன.

முகாமைச் சூழவும் சதுப்பு நிலமான வெட்டைவெளி; காப்பரண்களோ பதுங்கு குழிகளோ அமைப்பது மிகச் சிரமமானது. காப்பு அகழிகள் வெட்ட வெட்ட நீர் ஊற்றெடுத்து அகழிகள் இடிந்து வீழ்ந்தன. போராளிகளின் ஒவ்வோரு நகர்வுக்கும் அசைவுக்கும் இலக்கு வைத்தபடியே இராணுவம் இருந்தது. புலிகளின் முனைப்பான, முன்னேற்ற நடவடிக்கைகளை இராணுவம் கடுமையான தாக்குதல்களால் குலைக்க முயன்று கொண்டிருந்தது. விமானக் குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள் என ஓயாத எதிர்ப்பை இராணுவம் நடத்தியது. ஆனாலும் புலிகள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். இந்த முன்னேற்ற முயற்சிகளின் போதே இரத்தம் சிந்தவேண்டியேற்பட்டது. ஆனையிறவில் இராணுவத்தின் வளங்கள் பாதிக்கப்பட, கிளிநொச்சி இராணுவ முகாமும் இவ்வாறனதொரு இறுக்கமான நெருக்கடி நிலைக்குள் சிக்குண்டு போயிருந்தது.

(மிகுதி அடுத்த இதழில்)

வெளிச்சம்
தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலத்தை வென்ற கலைகள்

ஆக்கம்: வேலு

ஒவ்வொரு உண்மையான கலைஞனும் இன்று பற்றி எண்ணுவதே இல்லை. அவன் நாளை பற்றியே எண்ணுகிறான். எவனது பார்வை பல காலம் முன் னோக்கி சென்று சிந்திக்கிறதோ, அவனே அந்த சமுதாயத்தை மிகச் சிறப்பாக வழி நடத்திச் செல்ல தகுதி படைத்தவனாகி றான்.

சிந்திப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் அதற்கு செயல்வடிவம் கொடுப்பவன் சிந் தனையாளன் கலைஞன் என்ற நிலையிலிருந்து மேலும் உயர்ந்து சமுதாயத்தின் வழிகாட்டியாகவும், தலைவனாகவும் பரிணமிக்கின் றான். எவ்வளவுதான் சிறந்த சிந் தனையாக இருப்பினும் செயல் வடிவம் கொடுக்கத் தவறினால் அதில் பயனில்லை. எனவேதான் சிந்தனையாளர்கள் கலைஞர்க ளாகவும், கலைஞர்கள் தலைவர் களாகவும் பரிணாம வளர்ச்சி கொண்டால் சமுதாயத்தின் வளர்ச்சி வேகம் கூடிக் கொண்டே செல்லும். நாம் இங்கே குறிப்பி டும் .கலைஞர்கள் நச்சுக் கலைக ளின் பிறப்பிடமாக விளங்கும் கலைஞர்கள். அல்ல என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இயற்கையாகவே கலைக ளுக்கு மக்களைத் தன்பால் ஈர்க் கும் மகோன்னத சக்தி இருப்பத னால் அது சமூகத்தில் முதலிடம் பெற்றுவிடுகின்றது. அவ்வாறு முதலிடத்தைப் பெற்ற கலைகள் மக்களை நெறிப்படுத்தவும், முன் னோக்கி இட்டுச் செல்லவும் பயன் படுத்தப் படவேண்டும். அதனைச் செய்கின்ற சமூகத் தலைமைகள் நிகழ் காலங்களில் சில இன்னல் களுக்கும், கண்டனங்களுக்கும்



போர்க்காட்சி: குதிரையின் மீது மனித உருவம் தர்மபுரி மாவட்டம், மலப்பாடியில் கண்டுபிடிக்கப்பட்ட குகை ஓவியம் காலம்: தொல் பழங்காலம்

உள்ளானாலும், காலவெள்ளத் தால் கண்டனங்கள் புகழ் மாலையாக உருவெடுக்கும். ஏனெனில் எந்த ஒரு சமுதாயத் திலும் முற்போக்கான சிந்தனை யாளர்கள் சமுதாய மக்கள் தொகையைவிடக் குறைந்த விழுக் காடு உள்ளவர்களாகவே இருப் பார்கள். எந்த ஒரு சமுதாயத்தில் மிகக் குறைந்த விழுக்காட்டுடன் முற்போக்கான எண்ணம் கொண்ட கலைஞர்கள் உள்ளார்களோ, அவர்கள் அந்த சமுதாய மக்க ளாலேயே விமர்சிக்கப்பட்டு விலக் கப்படுவதும் கூட மனித இயல்பு. ஆனால் அவன் தனது படைப்புக் களை மீண்டும், மீண்டும் மக்கள் மத்தியில் கொண்டு வந்து தனது கருத்தை வலியுறுத்துவதன் மூலம் மற்றக் கலைஞர்களையும் மக்க ளையும் தன்பால் கவர வகை செய்ய இயலும். ஒரு காலத்தில் அவனது கலை விமர்சிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. எதிர்ப்புக் களை தாங்கும் முற்போக்காளன் எதனையும் சாதிக்கும் சாதனை யாளனாகிறான். காலன் கூட அவனிடம் அடிபணிகிறான். காலத்தை வெல்லும் கலைகளை படைத்ததன் மூலம் கலைகளின் உள்ளேயே கலைஞனும் வாழ்கி றான்.

"உன்னையே நீ அறிவாய்" என்று கூறும் சிந்தனையாளர்கள் கூட கூறத் தவறிய வரிகள் "இ யற்கையை நீ அறிவாய்" என்ப துதான். அதனை அறிந்தால் உன் னையே நீ அறிவாய் என்பதுதான் சரியான அடை மொழியாக இருக்க முடியும். மனித ஆற்ற லுக்கு மிஞ்சிய ஆற்றல் இயற்கை யிடம் இருக்கின்றது. அந்த ஆற் றல் பற்றி உணராதவன்தான் இயற் கையை அழிக்க முற்படுகின்றான்; அதன் மீது ஆத்திரம் கொள்கி றான். எதனையும் முடியாது என்று சொல்வது என் அகராதியில் இல் லவே இல்லை என்று சொன்னவர் கள் கூட ஒரு சிறு தேனி தன் கூட்டிற்குள் சேமிக்கும் தேனை உருவாக்க முடியுமா? மனிதர்க ளால் அது முடியவே முடியாது. ஆனால் அந்த தேனுக்கு இணை யானது, அதைப் போன்றது என்று

www.tamilarangam.net



வேண்டுமானால் விஞ்ஞானிகளால் உருவாக்க முடியலாம். ஆனால் அதனையே உருவாக்க முடியாது. அந்தத் தேனியையும், அது கட்டிய கூட்டையும், அது சேமித்த தேனையும் அழிக்க மட்டுமே தனது மேம்பட்ட அறிவால் சாதிக்க முடியும்.

பல கோடி ஆண்டுகளுக்கு முன் சூரியனிலிருந்து சிதறி விழுந்த நெருப்புப் பந்தானது இன்று மனிதனால் பூமி என்றும், உலகம் என்றும் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்ற இந்த உருண்டையில் சுமார் 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு செல் உயிரினமாக தோன்றிய அமிபா என்னும் உயிரினம் 250 கோடி வருடங்களுக்கு முன்பாக தாவரமாக பரிணாமமடைந்து பின் 55 கோடி வருடங்களுக்கு பிறகு மீன் உருவாகவும், பிறகு படிப்படியாக பூச்சி, மிருகம், குரங்கு என்ற நிலைகளைக் கடந்து மனிதனாகவும் வர அவனுக்கு 30 கோடி வருடங்கள் தேவைப்பட்டன. அந்தப் பல கோடி ஆண்டுகளில் பரிணாம வளர்ச்சி கண்ட மிருகங்களில், தன்னுடைய ஆற்றலால் இயற்கையிடம் இருந்து கற்றுக் கொண்டவைகளை அதனிடமே பிரயோகித்து வளர்ந்த விலங்கினம்தான் இன்றைய மனிதன். இவன் மீண்டும் மீண்டும் இயற்கையிடம் சென்றுதான் கற்கவேண்டியதானது நீண்டதொரு பரிணாம வரலாற்று நிகழ்வு. இந்த இயங்கியல் நியதியை உடைந்தெறிந்து விட்டு முன்னேறிவிட முடியாது. இந்த இயற்கையின் தன்மையை உணர்ந்து அவற்றுடன் இணைந்து தன் வளர்ச்சியை முன்னெடுக்கும் இனங்கள்தான் உலகில் நாகரிக வளர்ச்சி கொண்ட இனங்களாக பரிணாமம் கொள்கின்றன.

இந்த வகையில் இயற்கையுடன் தன்னை இணைத்துக் கொண்டு, அதற்கு மிகப் பெரியதொரு இடத்தையும் கொடுத்து அதனை போற்றி வணங்கும் நிலைக்கு கொண்டு சென்றுள்ள இனம்தான் திராவிட இனத்தின் மூத்த குடியான தமிழ் இனம். திராவிட இனங்களால் வணங்கப்படும் கடவுள்களில் முருகன் மட்டுமே தமிழ் கடவுள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடவுள் என்பது என்ன?

கடவுள் உண்டா? இல்லையா?

இது நீண்ட கால விவாதங்களுக்கு உட்பட்ட போதிலும் அதற்கு இதுவரை தீர்வு இல்லை. இந்த விவாதங்கள் மனித இனங்கள் உள்ளவரை இருந்து கொண்டே இருக்கும். கடவுள் உண்டு என்று சொல்பவர்களால் "எல்லாம் அவன் செயல்" என்று கூறப்படுவதனால் மனிதன் தன் முயற்சியில் இருந்து பின்வாங்கும் சூழல் உருவாக்கப்படுகின்றது என்பது மட்டும் உண்மை. எந்த செயலின் வெற்றியும் தன் முயற்சியின் பங்கால் மட்டுமின்றி பக்கக் கட்டுமானங்களாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. பக்கக் கட்டுமானங்களின் சாதக பாதக சூழலைப் பொறுத்தும் வெற்றி தோல்வி அமைகின்றது. அதனை உணராத காரணத்தினால், உணர இயலாத காரணத்தால் அல்லது உணர மறுக்கின்ற காரணத்தால் வெற்றி தோல்விகள் விதிப்படி நடப்பதாக நம்புகின்றான். இதில் புராண இதிகாசங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஆரியர்களின் ஊடுருவலால் திராவிட இனமானது தனது சுற்றுச் சூழல் கட்டுமானங்களை உணரத் தவறியதுடன், சராசரி அன்றாட வாழ்வு கூட ஆரியர்கள் உருவாக்கிய புதிய வேத அடிப்படையிலான கட்டுமானங்களில் (Social Structure) தன்னை ஆட்படுத்திக் கொண்டது. அதன் பின் அனைத்தும் விதி என்று நம்பவும் தொடங்கியது. தன் இன சார்பான வேதங்கள், உபநிடதங்கள் ஆரியர்களுக்கு பெரும் அரணாக விளங்கியதுடன், திராவிட இன அழிப்புக்களுக்கு கூரிய வாளாகவும் ஆகிவிட்டது. இதனை உணருகின்ற காலகட்டத்தில்தான் திராவிட மறுமலர்ச்சிக்கு வித்திடும் செயற்பாடுகள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. இதில் இயற்கையாகவே, இயற்கையுடன் ஒன்றிய, இயற்கை மீது நேயம் கொண்ட, இயற்கையை கடவுளாக வழிபடுகின்ற தமிழினம் தலைமை வகிப்பதில் வியப்பு ஏதும் இல்லை.

ஒரு மனிதன் தனது கலை, பண்பாடு, மொழி, வர்க்கம், சாதி, மதம், நாடு இவற்றை மாற்றிக் கொள்வதனால், இனமும் மாறியதாக ஆகிவிடுமா? அவ்வாறு மாறுவதானது பிறப்பால் ஆணாக உள்ளவன் அறுவைச் சிகிச்சை



உரிமைப் பிரகடனம், ஓவியம்: வீர. சந்தானம்
தொல் பழங்காலம் முதற்கொண்டு இன்றுவரை மனித சமூகம் தங்களது உரிமைப்பிரகடனங்களை போராட்டங்கள் மூலமாகவும், போர்மூலமாகவும் முன்னெடுத்துச் சென்றுள்ளது. தொல் பழங்கால குகை ஓவியங்களும் நவீனகால ஓவியங்களும் இதனைச் சித்தரிக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யால் பெண்ணாக மாறுவது போன்றதேயாகும். "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடி" என்று சொன்ன அவ்வை மூதாட்டி கடைச்சங்க காலத்தை சேர்ந்தவள். அக்காலம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம். அதற்கு முன்பான இடைச் சங்க, முதற் சங்க காலம் முதலே மூவேந்தர்களும் (சேர, சோழ, பாண்டியர்) சங்கம் அமைத்து தமிழ் மொழி காத்து கலை வளர்த்தனர் என்று வரலாறு கூறுகின்றது. கடைச் சங்க காலத்தில் எழுதப்பட்ட நூல்களின் மூலமாகத்தான் மற்ற இரு சங்க காலம் பற்றி அறியக் கூடியதாக உள்ளது. அக்காலங்களில் தமிழர்களின் கலை, பண்பாட்டு மேம்பாடு எவ்வாறு இருந்தன என்பதனை அறிய இலக்கிய சான்றுகள் ;தவிர கலைச் சான்றுகள் இல்லை.

முதற்சங்க காலத்தில் தமிழர்களின் தாயகமான இன்றைய பாரத கண்டத்திற்கு கீழ்ப்பகுதியில் மிகப் பெரியதொரு நிலப்பரப்பு இருந்ததாகவும் அதுவே "லெமூரியா" கண்டம் என்று அழைக்கப்பட்டதாகவும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அக்கண்டமானது கடல் கோளின் சீற்றத்தினால் அழிவுற்றிருக்கலாம் என்றும் பூகோளவியலாளர்கள் கருதுகின்றனர். கடலில் மூழ்கியுள்ள அப்பகுதிகளில் மாடமாளிகைகளும், பெரும் அரண்மனை போன்ற தோற்றம் கொண்ட பிரமாண்டமான கட்டிடங்களும் இருப்பதாகவும் அவைகளது எச்ச சொச்சங்கள் கடலின் மிக ஆழப்பகுதியில் கிடப்பதாகவும், அவை முற்காலத்தில் இக்கண்டங்களில் வாழ்ந்த மக்களின் இருப்பிடமாக இருக்கக் கூடும் எனவும் மேல்நாட்டு தொல்லியல் வல்லுனர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அவற்றைப் பற்றியதொரு ஆழ்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொண்டு நடத்தப் பெறவில்லை. பொதுவாகவே ஒரு இனத்தைப் பற்றிய பாரதூரமான செய்திகள் உறுதிப்படுத்தப்படும் போது இன எழுச்சி வெடிப்பது இயற்கையின் இயங்கியல் நியதி. அவ்வாறு அந்த இடத்தில் (இந்துமாகடலில்) மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சியானது இன எழுச்சிக்கு வித்துடுவதுடன் சில சமயங்களில் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் இனத்திற்கும் முந்தய கால மக்களாக காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்படும் நிலையை தவிர்ப்பதற்காகக் கூட ஆராய்ச்சியை தவிர்த்திருக்க வாய்ப்புகள் அதிகம்.

இவ்விடத்தில் முதன் முதலில் உலகில் மனித இனமானது லெமூரியா கண்டத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும் என்ற டார்வின் முன்வைத்த கருத்தினையும் கவனிக்க வேண்டும். அதனையே "இயற்கையின் இயங்கியல்" என்ற நூலை எழுதிய எங்கெல்ஸ் கூட "மனிதன், குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப்படியில் உழைப்பின் பாத்திரம்" என்ற நூலிலும் மேற்கொண்ட கருத்தையே வலியுறுத்தியுள்ளார். என்ன காரணத்தாலோ அந்நூலை அவர் எழுதி முடிக்கவில்லை. எது எப்படி இருந்த போதிலும் தமிழர்களின் ஆதிக் கலைகளை அறிய லெமூரியா கண்டத்தின் நீண்ட ஆராய்ச்சி தேவை. அதனை நிறைவேற்ற தமிழனுக்கு நாடு தேவை.

சகல கலைகளையும் மனிதன் இயற்கையிடமிருந்தே கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. தூக்கனாங்குருவி தன் கூட்டை எந்த பொறியியல் வல்லுனரைக் கொண்டும் வடிவமைக்கவில்லை. தேனி எந்த சேமிப்புக் கணக்கினைக் கொண்டும் தேனைச் சேமிக்கத் தொடங்கவில்லை. பறவை எதனைக் கொண்டும் பறக்கக் கற்கவில்லை. மீன் எதனைக் கொண்டும் நீந்திப் பழகவில்லை. யாவுமே இயற்கை. அவ்வாறான இயற்கைகளைக் கொண்டுதான் மனிதன் அறிவைப் பெருக்கிக் கொண்டான். கலைகளைக் கற்றதும் அவ்வாறேதான். மயிலின் நடனமும், குயிலின் பாட்டும் மனிதனை மயக்க வல்லனதான். அவை மனிதனை எந்த அளவு பாதித்திருக்கின்றன? ஆடக்கற்றான், பாடக்கற்றான். மனிதனிடமிருந்து இயற்கை கற்கவேண்டியது எதுவுமேயில்லை. அவன் அவற்றிற்கு இன்னல்கள் விளைவிக்காமல் இருந்தாலே இவ்வுல

## மீண்டும் குழாய்நீர் விநியோகம்

**மி**ன்சாரத் தடை காரணமாக கடந்த 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் பாதிப்புற்றிருந்த யாழ். மாநகரசபைக்கான குழாய்நீர் விநியோகம் மீண்டும் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 18 மாதங்களாக அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டும் பவுசர் வாகனம் மூலம் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது மீண்டும் நகரின் மத்திய பகுதிக்கான குழாய்நீர் விநியோகம் பொது நீர்க்கம்பங்கள் மூலம் வழங்கும் திட்டத்தை யாழ். மாநகரசபை நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியுள்ள நீர் இறைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் மேலும் பல முக்கிய பகுதிகளுக்கான குழாய்நீர் விநியோகம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கில் ஒரு அற்புதக் கலையை, கலையின் ஊற்றை அழிக்காமல் விட்டதற்காக அவனுக்கு நன்றி சொல்லலாம். இன்னும் எவ்வளவோ கலைகள் மனித மூளைக்கு எட்டாமல் இயற்கையிடம் மண்டிக் கிடக்கின்றன. மனிதன் மீண்டும் மீண்டும் இயற்கையுடன் பரிச்சயம் கொள்வதனால் மட்டுமே அவைகளை கற்று உணர முடியும். அவ்வாறான இயற்கையை நாம் அழகு என்கிறோம். அந்த அபரிமிதமான அழகையே தமிழன் முருகனாக வடித்து வணங்க முற்பட்டான். முருகன் என்றால் 'அழகு' அழகன் என்று பொருள். கலைகளை இங்கு விபரிக்க முற்பட்டால் கடவுள் என்பதை ஒதுக்க இயலாததாகி விடுகிறது. ஏனெனில் உலகில் எந்த இனத்தையும் விட அழகுக்கு கடவுள் வடிவம் கொடுத்து வணங்குவது தமிழினம். ஆனால் பின்நாளில் ஆரியர் தலையீட்டால் கடவுள் என்பது கேலிக் கூத்தாக்கப்பட்டது ஒரு வரலாற்று விபத்து. இது மீண்டும் தொடராது இருக்க கலைஞர்கள் தம் கலைகளில் மத, வர்க்க, பிராந்திய, இன ஆதிக்கங்கள் இல்லாது படைப்புக்களை வெளிக்கொணரவேண்டும். அவ்வாறு எந்தவொரு மேலாதிக்கமும் அற்ற கலையானது உண்மையும், அழகும் கொண்டிருப்பின் அது நிகழ் காலத்தை மட்டுமல்ல எதிர்வரும் காலத்தையும் வெல்லும் கலைகளாக மின்னிக் கொண்டேயிருக்கும். ▩

# தமிழ் மக்கள் ஏற்கும் விதத்தில் காவல் துறை செயற்படுகிறது.



இன்முகத்துடன் காவற்பணியில்

"தமிழீழ மக்கள் ஒருங்கிணைந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் சட்டத்தையும், ஒழுங்கையும் தமிழீழக் காவல்துறை நிறைவுசெய்து வருகின்றது."

இவ்வாறு தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

"தமிழீழக் காவல்துறை ஆரம்பமாகிய 9 மாத காலத்திற்குள், பொதுமக்களின் ஆதரவுடன் நாம் பெரும் வளர்ச்சியை அடைந்துள்ளோம்.

- போர்க்காலச் சூழ்நிலைகள் ஏற்படும் வேளைகளில், யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட பதுக்கல்களைக் காவல்துறையினர் மிக வெற்றிகரமாக முறியடித்துள்ளனர்.
- அவ்வப்போது தலைதூக்கும் பலவித சண்டைகளில் அரசசார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் உதவியுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் நாம் சுமுகமாகத் தீர்த்து வைத்துள்ளோம்.
- வீதிப் போக்குவரத்துக்களில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளினால், பாரிய விபத்துக்களையும், மரணங்களையும் தவிர்த்து வருகின்றோம். இளம் வயதினர் சைக்கிள்களில் பக்கம் பக்கமாகச் செல்வதினாலேயே சிறு விபத்துக்கள் ஏற்படுகின்றன. இளம் வயதினர் வீதிகளில் பொறுப்புடன் நடந்து கொண்டால், இது போன்ற விபத்துக்களை வருங்காலத்தில் பெருமளவில் தவிர்த்துக் கொள்ள முடியும்.
- காவல்துறை ஆரம்பமான பின்னர், முன்னைய காலங்களில் நடைபெற்றதுபோல் பாரிய கொள்ளைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. சிறுசிறு திருட்டுச் சம்பவங்கள் தற்போது நடைபெற்று வந்தாலும், அவற்றுக்கு எதிராக நாம் உடன் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.




காவற்துறைப் பொறுப்பாளர்
திரு. நடேசன்.

தமிழீழக் காவல்துறை, இந்தக் குறுகிய காலத்திற்குள் நாம் எதிர்பார்த்ததை விடப் பெரும் வளர்ச்சியடைந்தமைக்குக் காரணம், தமிழீழ மக்களின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் சரியான வழிகாட்டலே" என்றும் திரு. நடேசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## சைக்கிள் றிக்சா பாவனையில்

1990 ன் நடுப்பகுதியில் இருந்து சிறிலங்கா அரசு விதித்த எரிபொருள் தடை மினிபஸ்கள் உட்பட நவீன போக்குவரத்து சாதனங்கள் மீது பெரும் முடக்கங்களை ஏற்படுத்தியது. துவிச்சக்கர வண்டிகள் பிரதான போக்குவரத்து சாதனமாயிற்று குறுகிய தூர இடைவெளிக்குள் மக்களை நகர்த்தும் பிரதான சாதனமாகச் சைக்கிள் ரிக்சாக்கள் முதன்மை பெறலாயின. சுமார் 15 மைல் தூர பிரயாணங்களுக்கு நோயாளர்களையும் முதியவர்களையும் ஏற்றி இறக்கும் முக்கிய வாகனமாக சைக்கிள் ரிக்சாக்கள் அமையலாயிற்று.

## கடற்புலிகள் ஈழப் போரில் ஒரு பாய்ச்சல்


எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புதிய பரிமாணமாய் எழுந்து நிற்கும் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் இலங்கை கடற்படையுடன் நேரடிச் சண்டையில் ஈடுபட்டு எதிரிகளை திணறடிக்கச் செய்து வருகின்றனர். அண்மையில் பூநகரி கிளாலி கடற்பகுதியில் நடைபெற்ற கடற் சண்டையில் இலங்கைக் கடற்படையினரை எதிர்த்து கடற்புலிகள் R. P. G, மற்றும் பல நவீனரக ஆயுதங்களைக் கொண்டு எதிரிகளின் படகுகளை விரட்டி விரட்டி அடித்தனர். கடற்பரப்பிலே சீறிப் பாய்ந்த கடற்புலிப் படகுகளில் கம்பீரமுடன் காணப்பட்ட வீரர்களின் ஆவேசத் தாக்குதல்களில் நிலைகுலைந்த கடற்படை பாரிய சேதங்களுடன் பின்வாங்கியது. இதுவரை காலமும் நிலப்பரப்பிலே நடுங்கிய படி கால்களைப் பதித்து நடந்த சிங்கள இராணுவம், தமிழீழ நாட்டிற்கு சொந்தமான கடற்பரப்பிலும் தற்போது ஆக்கிரமிப்புப் பவனி நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தமிழீழ போராட்டத்தில் புதிய அத்தியாயமாய் இக் கடற் சண்டைகள் அமைகின்றது.

நீர் மூழ்கிப் படகுகளைத் தயாரித்து தாக்குதலை நடத்துதல் என்ற விடயம் புதிய இன்னொரு பாய்ச்சலைக் காட்டுகின்றது.

## போர்க்காலச்சூழலில் மக்களிடையே உணவுப் பழக்கத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள்

எமது முன்னோரின் நோயற்ற நீடித்த ஆயுள் கொண்ட வாழ்க்கைக்கு அவர்களது உணவுப் பழக்கமே காரணமாகும். அவர்களது உணவு வகைகளைப் பற்றி ஆராயுமிடத்து அவை பெரும்பாலும் பனாட்டு, ஒடியல், சாமை, தினை, குரக்கன், வரகு போன்றவற்றில் செய்த பண்டங்களாகவே இருந்து வந்துள்ளன. உதாரணமாக அண்மைக்காலத்தில் தீவுப் பகுதிகள் மீதான நடவடிக்கைகளின் போது அங்கு சிக்குண்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் பல மாதப் பசிப் பிணியினை அகற்ற, நம் கற்பக தருவின் பயன்களாவன பனாட்டு, ஒடியல் போன்ற இன்னோரன்ன உணவு வகைகளே கைகொடுத்தது. இதன் மூலம் எம் மண்ணின் வளமே எம் உயிர் காக்கும் மருந்து என்பதை உணர்ந்து எமது உணவுப் பழக்கத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைச் சேர்க்கும் வழக்கத்தை அதிகரிக்க வேண்டும்; மேலும் இவ்வாறான உற்பத்திகளை நுகர்வதற்கு நாம் கற்றுக் கொண்டோமேயானால் உள்ளூர் உற்பத்திகள் பல மடங்கு பெருகுவதற்கும், இதன் மூலம் பலர் வேலை வாய்ப்புப் பெறுவதற்கும் வழிவகுக்கும்; அதேவேளை வீணாக அழியும் மூல வளங்களை பயன்படுத்துவதற்கும், வெளிச் செல்லும் கணிசமான அளவு பணத்தையும் நம் மண்ணிலையே தங்க வைப்பதற்கும் இந் நடைமுறைத் திட்டமானது கை கொடுக்கும் என்பது வெளிப்படையான உண்மையாகும் என்பதனை உணர்ந்து தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் இவ்வுற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது.





## காமாட்சி இரும்புத் தொழிற்சாலை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், அபிவிருத்தி, வளர்ச்சி என்பவற்றை நோக்கமாகக் கொண்டது. பல தொழில் வல்லுனர்களின் ஆலோசனைகளில் இது நடைபெறுகின்றது. இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம் பெறுகின்றது. உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளும் மேற் கொள்ளப்படுகின்றன. இந்த அமைப்பின் கீழ் வர்த்தக நிலையங்கள், தொழில் நிறுவனங்கள் என்பன இயங்குகின்றன. இதில் காமாட்சி இரும்பு தொழிற்சாலையும் ஒன்றாகும்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பல்வேறு இயந்திரங்களை கொண்டதாக இது விளங்குகின்றது. கிருமிநாசினி தெளிகருவி, கத்திகள், மண்வெட்டிகள், தோட்ட மண்வெட்டிகள், சத்தகங்கள், வாள்கள் என்பன இந்த தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றது.

www.tamilarangam.net



ஊழிக் கூத்தில் உடல்கள் சிதைந்தன
உருக்குலைந்தது இருதயம்; அஞ்சிப் போய்
ஓலமிட்டன காக்கைகள்; நாய், நரி
ஊளையிட்டன; குருதி பொழிந்தது.